செப்டம்பர் 2020

# கொலம்பஸ் தமிழ்

# சாரல்

## இலையுதிர் கால இதழ்




State of Ohio
Procurement
STATE TERM SCHEDULE
GSA Schedule
DevCare Solutions
DevCare Solutions is a full service IT Solutions Firm based in Columbus, Ohio, specializing in IT Solutions, IT Staffing and IT Project Services. The IT solutions that we offer are completely customizable,versatile, flexible, intuitive, and designed to meet individual business needs.
MBE CERTIFIED
WBENC
Microsoft CERTIFIED
aws partner network
ivanti
* TOP PERFORMING VENDOR UNDER THE FOLLOWING STATE STAFF AUG PROGRAMS: MICHIGAN / OHIO / PENNSYLVANIA
* TOP 5 PERFORMING VENDOR in 16 OTHER STATE STAFF AUG PROGRAMS
* CRM SOLUTIONS - SALESFORCE & MS DYNAMICS
* ITSM SOLUTIONS - IVANTI SOFTWARE TOOLS
* CLOUD SOLUTIONS - AMAZON AWS
* CUSTOM MOBILE APPLICATIONS - XAMARIN, PHONEGAP, ANDROID, IOS
* CUSTOM WEB APPLICATIONS - JAVA, .NET ...
* INC 5000 FASTEST GROWING COMPANIES IN AMERICA
* FAST GROWING PRIVATE 50 COMPANIES IN COLUMBUS
131 N. High Street
Suite 640
Columbus, OH 43215
ph: 614.221.2277
info@devcare.com
www.devcare.com

# உள்ளடக்கம்


1. தலையங்கம் ……………………………………………….............2
2. கழனி வாழ்வு ……………………………………………….....4
3. புத்தக விமர்சனம் - WILD ………………………………….....5
4. சித்திரம் ……………………………………………....................8
5. அல்லவை தேய அறம்பெருகும் ………………………….....10
6. உயிருக்கு நேர் ……………………………………………......17
7. தாய்மொழியின் அவசியம்………………………………....18
8. ஸ்மார்ட் போனும் நாமும் ……………………………….....19
9. சமைக்க ருசிக்க ………………………………………………23
10. பட்டத்து யானை, குற்றப் பரம்பரை ……………………26
11. கொலம்பஸ் தமிழ்ச் சங்கச் செய்திகள்…………………....28
12. எனது கனவுத் தோட்டம்……………………………………....31
13. இன்றைய வேண்டும் ………………………………………....33
14. திசை மாறிய தொப்புள்கொடி உறவுகள்……………….....34
15. தேசிய கல்விக் கொள்கை 2020 …………………………….41
16. விடைகள் ……………………………………………………......45
17. தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு………………………………...47
18. சாரல் குழு …………………………………………………......48

# தலையங்கம்



நினைத்தாலே இனிக்கும் அனுபவங்கள் நம் எல்லோர் வாழ்விலும் உண்டு. பட்டம் வாங்கிய நிகழ்வு, முதல் வேலை, முதல் சம்பளம், முதல் காதல், முதல் குழந்தை, வாய்ப்புகளின் தேசமான அமெரிக்காவில் காலடி வைத்த நாள், இவையெல்லாம் நம் நினைவேட்டில் நீங்கா இடம் பிடித்த பக்கங்கள்.

மாறாக, தவிர்க்கவியலாத கசப்பான நிகழ்வுகளும் வாழ்வின் அங்கமே. தனிமை, கவலை, ஏமாற்றம், நோய், உற்றார் மரணம், போன்ற தருணங்களில் நிமிடங்கள் வருடங்களாகும், நாட்கள் யுகங்களாக நீளும்.

உலகளாவிய கோவிட்-19ன் தாக்கம் கடந்த சில மாதங்களாக நம் வாழ்வு முறையைக் கலைத்துப் போட்டுள்ளது - மின் வர்த்தகம், சமூக இடைவெளி, பலமுறை கை கழுவுதல், வீட்டிலிருந்து பணி, மெய் நிகர் பள்ளி என இருந்தாலும், நம் செயல் திறன் குறைந்திருப்பது உணர முடிகிறது. குடும்பத்தாருடன் முன்பை விட அதிக நேரம் இருக்க முடிந்தாலும், மனதில் ஏதோ இனம் புரியா இறுக்கம். கண்டிப்பாக, இவை நிச்சயமற்ற இச்சூழல் தந்த அச்சங்களே.

கடந்த நூற்றாண்டில் ஸ்பானிஷ் ஃப்ளு மட்டுமின்றி பல பேரிடர்களைத் தாண்டி தன்னை மீட்டெடுத்து கொண்ட கட்டமைப்பு கொண்டது இந்நாடு. ‘இதுவும் கடந்து போகும்’ என்பதை அமெரிக்கர்கள் மட்டுமல்லாது நாமும் நம்புவோம். காலச்சக்கரத்தின் சுழற்சி தவிர்க்க இயலாதது.

‘காலம் புதிய வார்ப்புகளை நெய்து கொண்டிருக்கிறது. அதற்கு வளைபவர்கள் மீண்டு வாழ்கிறார்கள், எதிர்ப்பவர்கள் ஒடிந்து மடிகிறார்கள்.’ என்றார் ஜெயகாந்தன், தன் புதிய வார்ப்புகள் கதையில். வளைந்து இம்மாற்றங்களை எதிர்கொள்வோம், வாழ்வை மீண்டும் வளமாக்குவோம்.

திரைக்கடல் ஓடி திரவியம் தேட வந்த நம்மை இணைக்கும் பாலம் நம் தாய்மொழி. பெரும்பான்மையாக தகவல் தொழில் நுட்ப பணியில் இருக்கும் நம் தமிழ் மக்கள், புதிது

புதிதாக உருவெடுக்கும் கணினி மொழிகளை எளிதாக தம் வசப்படுத்துவதற்கு தமிழ் மொழியறிவு உதவியதென்றால் மிகையில்லை. ஏனெனில், செம்மொழி கற்றவருக்கு மறுமொழி எளிதன்றோ!

5ம் நூற்றாண்டில் திருக்குறள், 6ம் நூற்றாண்டில் சிலப்பதிகாரம், 12ம் நூற்றாண்டில் கம்பராமாயணம், இன்னும் பல தமிழ் வைரங்கள் தொழில் நுட்பமில்லாத காலத்தில் கரையான் அரிப்புகளையும், கால மாற்றங்களையும் தாண்டி இன்றும் கம்பீரமாய் முத்தான வாழ்க்கைத் தத்துவங்களை அள்ளிக் கொடுத்து மின்னிக் கொண்டிருக்கின்றன. வழி வழியாக வந்த இரத்தினங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்வது நம் தலையாய கடமை. தமிழின் மீதான காதல், நம்மை அதன் பால் உந்தித் தள்ளும் என்பது உறுதி!

நண்பர்களே, நம்மை ஒன்றிணைக்கும் கொலம்பஸ் தமிழ்ச்சங்கத்தின் பல்வேறு முயற்சிகளில் சாரல் ஒரு முக்கிய அங்கம். இன்னும் பல்வேறு மைல் கற்களைக் கடக்கவிருக்கும் அதன் பயணத்தின் முதல் மைல் கல்லை கோடை விடுமுறையில் வெளிவந்த முதல் இதழில் கடந்தது.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்

என்றார் மகாகவி. அதற்குத் தகுந்தாற்போல், தங்கள் மனமார்ந்த உழைப்பையும், பொன்னான நேரத்தையும் நல்கும் சாரல் குழுவிற்கு என் உளமார்ந்த பாராட்டுகள். இந்தச் செடியை ஆதரவெனும் தண்ணீர் பாய்ச்சி, பங்கேற்பெனும் உரமிட்டு விருட்சமாக வளர்ப்பது நம் அனைவரின் கடமை.

மொழி பல கற்போம், ஆனாலும் தமிழ் மீது தீராக் காதலை வைப்போம்!

அன்புடன்,

பிரியதர்ஷினி செல்வராஜ்

செயலாளர், கொலம்பஸ் தமிழ் சங்கம்

# கழனி வாழ்வு



*-இரவீந்திரன் காளிமுத்து*

காடு வெளஞ்சென்ன புள்ள - நமக்குக்
 கையுங் காலுந்தானே மிச்சம்
வீடு நெறஞ்சென்ன புள்ள - நமக்கு
 வேட்டி சேலை தானே மிச்சம்.

சேறுஞ் சகதியில் மச்சான் - நாம
 செந்நெல் விளைத்திடவே தவிச்சோம்
சேரும் செல்வமெல்லாம் மச்சான் - சேர்த்து
 சேட்டுக் கடனைத்தானே முடிச்சோம்.



காடு கரம்பையெல்லாம் புள்ள - இப்போ
 கல்ல நட்டுவச்சு விப்போம்
வீடு நிறைஞ்சுடும் புள்ள - நாம
 செல்வம் குவிச்சு வைப்போம்.

காடு கரம்பையெல்லாம் மச்சான் - இப்போ
 கல்ல நட்டுவித்தா நாம
மாடும் மறைஞ்சிடும் மச்சான் - நல்ல
 வாழ்வும் அழிஞ்சிடும் வீணா.






**நீங்கள் ஒரு பொருளை உங்கள் பக்கத்து வீட்டுகாரரிடமிருந்து *$40* க்கு வாங்குகிறீர்கள். அந்த பொருள் இனிமேல் உங்களுக்கு தேவையில்லை என எண்ணி, மற்றொருவரிடம் *$50*க்கு விற்று லாபம் அடைகிறீர்கள். ஆனால் அந்த பொருள் உங்களுக்கு மீண்டும் தேவைப்படுகிறது. ஆதலால் அதே பொருளை, *$10* கூதுதலாக *($60)* கொடுத்து வாங்க வேண்டியதாயிற்று. தேவை முடிந்தவுடன், அந்த பொருளை *$70*க்கு வேறு ஒருவரிடம் விற்றுவிட்டீர்கள். இந்த ஒட்டு மொத்த வியாபாரத்தில், உங்கள் லாபம் / நஷ்டம் எவ்வளவு?**

## புத்தக விமர்சனம் – *WILD*



- ***நிர்மலா***

ஆயிரத்து நூறு மைல் (1770 KM) தூரத்தை, மூன்று மாதக் காலத்தில், தனி ஒரு பெண்ணாக மிக நீண்ட நடைப்பயணம் (HIKE) செய்து சாதனைப் படைத்தவர் செரில் ஸ்ட்ரெய்ட் (CHERYL STRAYED). இவர் 2012-ம் ஆண்டு வெளியான WILD புத்தகம் மூலம் தன் பயண அனுபவங்களை மிக சுவாரஸ்யமாகவும், விறுவிறுப்பாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இந்தப் புத்தகம் நியூயார்க் டைம்ஸ்-ன் சிறந்த விற்பனையாளர் பட்டியலில் இடம்பிடித்ததோடு மட்டுமன்று மேலும் பல விருதுகளைப் பெற்றுள்ளது. இது காடுகள், நடைபயணம் மற்றும் மலையேற்றத்தில் ஆர்வமுள்ளோர் கண்டிப்பாகப் படிக்க வேண்டிய ஒரு புத்தகமென்றால் அது மிகையாகாது.

தன் தாயை இழந்த வலி, உடன்பிறப்புகள் பிரிந்து சென்ற வருத்தம், கணவரோடு விவாகரத்து என பல்வேறு காரணங்களால் மன உளைச்சலில் இருந்து விடுபட இயலாத நிலையிலிருந்த செரில், தற்செயலாக REI (RECREATIONAL EQUIPMENT INC) - யென்னும் பிரபலமான பொழுதுபோக்கு பொருட்கள் விற்கும் கடையொன்றில் *The Pacific Crest Trail Vol 1: California* புத்தகத்தை காண்கிறார். அந்த புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததும் ஒரு சிறு தீப்பொறியாக தோன்றிய எண்ணம் நாளடைவில் பேராவலாக மாறி, PACIFIC CREST TRAIL (PCT) -ல் நடைப்பயணம் செய்வதென முடிவு செய்கிறார்.

PCT - யின் ஒட்டுமொத்த தூரம், 2,653 மைல் (4,270 km) ஆகும். இந்த நடைப்பயண பாதை தெற்கு கலிபோர்னியா-வின் கேம்போ (Campo) நகரில் (மெக்சிகோ நாட்டின் எல்லை) தொடங்கி கலிபோர்னியா, ஓரிகன் மற்றும் வாஷிங்டன் ஆகிய மூன்று மாநிலங்களையும் கடந்து கனடா நாட்டின் எல்லையான மெனிங் பார்க், பிரிட்டிஷ் கொலம்பியாவில் முடிவடைகிறது. மக்கள் வாழும் பகுதிகளைத் தவிர்த்து, இயற்கை எழில் மிகுந்த அடர்ந்த காடுகள், வனப்பகுதிகள், பனிமலைகள், வறண்ட நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களைக் கடந்து செல்கிறது இப்பாதை. இந்த PACIFIC CREST TRAIL -ல் கடந்த ஆண்டில்(2019) மட்டும் 17 நபர்கள் பல்வேறு காரணங்களால் (மலையிலிருந்து தவறி விழுதல், நீரிழப்பு, வாகன விபத்து) உயிரிழந்துள்ளனர்.



சுட்டெரிக்கும் வெயில், மிருகங்கள் (காட்டுமாடு, பாம்பு, கரடி, தவளை, எறும்பு, மான்), மலை முகடுகள், குளிர்ந்த இரவுகள்,

பசி, தண்ணீர் தட்டுப்பாடு என சவால்கள் நிறைந்த இந்தப் பாதையை அதீத மன உறுதி உள்ளவர்களால் மட்டும் தான் கடக்க முடியும். அந்த விதத்தில், தன்னுடைய அனுபவங்களை, மிக எளிதாகவும், யதார்த்தமாகவும் செரில் தன் புத்தகத்தில் கூறியுள்ளார். வாழ்க்கையின் துயரத்தை மறக்கவும், தனிமையில் நேரத்தை செலவழிக்கவும் மட்டுமே இந்த முயற்சியை மேற்கொண்ட இவருக்கு, மன அமைதி கிடைத்ததா இல்லையா என்பது தான் இந்தப் புத்தகத்தின் முடிவுரை.



நீங்கள் புத்தகம் படிக்கும் பொழுது என்றாவது உங்கள் சிந்தனை அலை பாய்ந்தது உண்டா? அப்படி ஒரு நாள் என்னுடைய கவனம் சிதறிய பொழுது தோன்றிய கேள்வி இது. நீங்கள் தற்பொழுது படிக்கும் புத்தகத்தின் இரு பக்கங்களின் எண்களுடைய கூட்டுத்தொகை *(sum of 2 page numbers facing you)* 57 என்றால், வலது பக்கத்தின் எண் என்னவாக இருக்கும்?



**கணவன்-மனைவி:**

**நண்பன்: என்னடா மனைவி போட்டோவையே உத்து பாத்துகிட்டு இருக்கே,**

**சக நண்பன்: ஆமான்டா, மேனேஜர் திட்டிட்டாருடா.. மனசே சரியில்ல டா.. அதான்...எனக்கு எந்த ஒரு கஷ்டம் வந்தாலும், என் மனைவி போட்டோவை பாத்தேன்னா எல்லாத்தையும் மறந்திடுவேன்...**

**நண்பன்: மனைவி மேல அவ்வளவு பாசமா?**

**சக நண்பன்: அட நீ வேற .. நமக்கு இதவிட வேற என்ன கஷ்டம் வந்துட போகுதுங்கற தெம்பு தான்**




Always Hiring
Technology Professionals
and Graduate Students
American Business Solutions,Inc.
Call Toll Free :877-781-ABSI
Visit us at: http://www.absi-usa.com
OUR SERVICES:
Consulting
Staffing
Solutions
50
Inc. 5000
Forbes
GSA
Top 10 IT Firm * Many Direct Clients * Free Sponsorship H1B & GC EB2

# சித்திரம்



*சினேகா பிரபு*



*லித்திக்கா பாலாஜி*







*தாருணி கனகசபை*


IF YEMEN WAS 100 PEOPLE,
80 NEED HUMANITARIAN AID,
67 HAVE NO ACCESS TO CLEAN WATER,
66 HAVE NOTHING TO EAT,
59 HAVE NO ACCESS TO HEALTHCARE,
AND 11 ARE MALNOURISED.
BUT YEMEN ISN'T 100 PEOPLE
IT'S 30.5 MILLION
PEOPLE...


Eric Garner Tony Tobinson Michelle Shirly Kyjuanzi Harris Freddie Blue Samuel Dubose
John Crawford III Anthony Hill Tony McDade Amari Boone Joseph Mann Michael Sabbie
Michael Brown Mya Hall Shukri Abdi Tete Gully Salvado Ellswood Emmett Till
Ezell Ford Phillip White Chance Dunlap Gittens Tyler Evans Sandra Bland Felix Kumani
Dante Parker Eric Harris Regis Korchinski Paquet Albert Joseph Davis Junior Prosper
Michelle Cusseaux Walter Scott Belly Mujinga Victor Manuel Larosa Darrius Stewart Indian Kager
Laquan McDonald William Chapman II Billy Ray Davis Sean Reed
George Mann Alexa Christian Brain Keith Day
George Floyd Brendon Glenn Christian Taylor
Tanish Anderson Breonna Taylor
Akai Gurley Troy Robinson
Tamir Rice Lamontex Jones
Rumain Brisban Paterson Brown
Jerame Reid Dominic Hutchinson
Matthew Ajbade James Scurlock
Frank Smart Amiya Braxton
Natasha McKenna Ahmaud Arbery

# அல்லவை தேய அறம்பெருகும்



*-மலர்விழி மணியம்*

“குட்மார்னிங் மா” என்று அஞ்சலி, சமையலறையில் காபி போட்டுக் கொண்டிருந்த ஜானகியை கட்டிக்கொண்டாள். “இன்னைக்கு ரொம்ப பூரிப்பா இருக்கீங்க. என்ன விஷயம்?” என்று கேட்டாள் அஞ்சலி.

அஞ்சலியின் கன்னத்தைக் கிள்ளிக் கொண்டே “கண்டுபிடி” என்று கூறியபடி சத்துமாவு கஞ்சியைக் கொடுத்தார் ஜானகி. அதைக் குடித்தபடியே சிந்தனைகளில் தேடினாள் ஜானகியின் இன்றைய பூரிப்பின் ரகசியத்தை.

“கஞ்சியக் குடிச்சுட்டுப் போய் மனோவையும், ப்ரியாவையும் எழுப்பி விடும்மா. நான் போயி அப்பா எழுந்துட்டாரானு பார்த்துட்டு வரேன்” என்று அஞ்சலியிடம் கூறிவிட்டு ஜானகி சென்றார்.

ஜானகி கதவைத் திறந்தவுடன் “குட்மார்னிங் ஜானு டியர். ஹேப்பி ரிட்டன்ஸ் ஆஃப் த டே!” என்று கூறித் தன் மனைவிக்கு வாங்கியிருந்த பரிசைக் கொடுத்தார் செந்தில்.“தேங்க்யூ.. ஹனி ஹேப்பி ரிட்டன்ஸ் டு யூ டூ,” என்று செந்திலின் பரிசை வாங்கிக் கொண்டு தன்னுடைய பரிசை செந்திலுக்குக் கொடுத்தார் ஜானகி.

இருவரும் பிள்ளைகளுக்காக வாங்கிய பரிசுகளை எடுத்துக் கொண்டு டைனிங் டேபிளை நோக்கி சென்றனர். அவர்கள் பளபளக்கும் உடையோடு வருவதைப் பார்க்கும் போது தான் இன்று அவர்களுடைய திருமண நாள் என்பது அஞ்சலியின் நினைவிற்கு வந்தது. புன்னகையுடன் அஞ்சலி ஜானகியை அணைத்துக் கொண்டு “இனிய திருமண நாள் வாழ்த்துக்கள் அம்மா” என்றாள்.

“சுத்தமாக மறந்துட்டேன். ஸாரி, கிப்ட் எதுவுமே வாங்கல” என்று கூறி வருந்தினாள் அஞ்சலி.

“நீ தரப் போற பேரக் குழந்தையே பெரிய கிப்ட் தாம்மா” என்றார் செந்தில்.

“நான் தான் முதல்ல போவேன்…”, “நான் தான் முதல்ல போவேன்..” என்று மனோவும் பிரியாவும் சண்டை போட்டுக் கொண்டே வருவது கண்டு, “ஆரம்பிச்சுடுச்சுங்க காலையிலேயே” என்றாள் அஞ்சலி.

“நீ கொஞ்சம் தள்ளி நில்லுமா. சுனாமி ரெண்டும் இப்போ மேல வந்து மோதும்” என்றார் செந்தில். சொல்லியது போலவே இருவரும் ஜானகியையும் செந்திலையும் இடித்து மோதி “ஹாப்பி வெட்டிங் டே அம்மா அப்பா”, என்றனர்.

சிரித்துக் கொண்டே "தேங்க்ஸ்" என்றார் ஜானகி.

ஜானகி - செந்தில் தம்பதியருக்கு இரண்டு பிள்ளைகள், மூத்தவன் மனோ, இளையவள் பிரியா. மனோவின் மனைவி அஞ்சலி.

"எனக்கு ஞாபகப்படுத்தி இருக்கலாம்ல, அப்பா-அம்மா வெட்டிங் டேய, நான் சுத்தமா மறந்துட்டேன்" என்றாள் அஞ்சலி பொய்க்கோபத்துடன். "இட்ஸ் ஓகே, உனக்கு ஞாபகம் இருக்கும்ன்னு நினைச்சேன்", சமாதானப்படுத்தினான் மனோ.

அனைவரும் பேசிக் கொண்டே டைனிங் டேபிளில் அமர்ந்தனர். ஜானகி அனைவருக்கும் காலை உணவு பரிமாறினார்.



"ம்ம்ம் .... என்னம்மா காலையிலேயே மட்டன்" என்று கேட்டாள் பிரியா.

"அஞ்சலிக்கு பிடிக்கும்னு தான் செய்தேன்" என்று ஜானகி கூறினார். "நல்லா சாப்பிடும்மா" என்றார் வாஞ்சையுடன் செந்தில். அஞ்சலிக்கு ஆனந்தக் கண்ணீர் வந்தது ஜானகி - செந்திலின் பாசத்தைக் கண்டு.

"ஏம்மா கண் கலங்கற" என்று ஜானகி அஞ்சலியைத் தோளோடு அணைத்துக் கொண்டார்.

"காரமா இருக்குது போல" என்றான் மனோ கிண்டலாக.

அஞ்சலியின் தாய் மிகவும் வயதானவர், அவரால் அஞ்சலியை குழந்தைப்பேறு காலத்தில் கவனித்துக் கொள்ள முடியாது என்பதால் ஜானகி மருமகளைத் தானே பார்த்துக் கொள்ள முடிவு செய்திருந்தார்.

"உங்க மாமியார் உங்களை இப்படித்தான் பார்த்துகிட்டாங்களா மா, அதனாலதான் என்னை இவ்வளவு நல்லா பாத்துக்கறீங்களா" என்று கேட்டாள்.

"லொக்கு.. லொக்கு.." என்று புரையேறியது செந்திலிற்கு. தலையைத் தட்டி கொண்டே தன் முன் இருந்த தண்ணீரை குடித்தார்.

"ஆமாம்மா ரொம்ப நல்லா பார்த்துக்கிட்டாங்க. அடுத்தநாள் நான் என்ன சாப்பிடணும்றத முதல்நாளே முடிவு பண்ணிடுவாங்க" என்றார் ஜானகி.

"அவ்வளவு பாசமா உங்க மேல??!!!" என்று ஆச்சரியப்பட்டாள் அஞ்சலி .

"புஃகு.. புஃகு..."என்று திரும்பவும் புரையேறியது செந்திலிற்கு. தலையைத் தட்டிக்கொண்டே எதிரே இருந்த டம்ளரை எடுத்தார். டம்ளர் காலியாக இருந்தது. நமட்டுச் சிரிப்புடன் மனோ தன்னுடைய டம்ளரை நீட்டினான் தன் அப்பாவிற்கு.

“பாசம் எல்லாம் இல்ல, அன்னைக்கு எது எல்லாம் மீதியாகுதோ, அதெல்லாம் அடுத்த நாளைக்கு எனக்குத் தான் போடுவாங்க” என்று ஜானகியின் பதிலைக் கேட்டு வாயடைத்துப் போனாள் அஞ்சலி.

“நீ கேட்டதால சொல்ல வேண்டியதாப் போச்சு. செக்குமாடு மாதிரி வேலை செய்யணும், டெய்லியும் சண்டை ஒரு அமைதியான மனநிலையே இருக்காது” என்றார் ஜானகி.

“அப்பா, உங்களுக்கு சப்போர்ட்டா இருந்திருப்பாங்க இல்ல?” என்று கேட்டாள் அஞ்சலி.

குபீரென்று மறுபடியும் புரை ஏறியது செந்திலுக்கு. இம்முறை பிரியா தன் தண்ணீர் டம்ளரை கொடுத்தாள் தன் அப்பாவிற்கு, சிரித்துக்கொண்டே.

“ஆரம்பத்தில இல்ல. நான் ஒன் வுமன் ஆர்மின்னு நினைச்சு விட்டுட்டாரு.” என்று காமெடியாக சொன்னார் ஜானகி. விளையாட்டாக சொன்னாலும் அதில் இருக்கும் வலியை உணர முடிந்தது அஞ்சலியால்.

“அப்புறம, எப்போ இருந்து அப்பா சப்போர்ட் பண்ண ரம்பிச்சாங்க?” என்று கேட்டாள் அஞ்சலி.

அடுத்து இருமுவதற்காக வாய் திறந்த செந்திலிடம் ஜானகி, “போதும்... இதுக்கு மேல தண்ணி இல்ல. அஞ்சலி கேள்விக்கு நீங்களே பதில் சொல்லுங்க” என்றார்.

USG

"ம் .. சொல்றேன்...அதுக்கு முக்கிய காரணம், என் மனக்கண்ணை திறந்த ஜானகியோட அம்மாவும், அறிவுக்கண்ணைத் திறந்த என் அப்பாவும் தான்" என்றார் செந்தில்.

"ஒரு தடவை பிள்ளைகளுக்கு ஆண்டு விடுமுறை வந்தது. ஜானகியையும், பிள்ளைகளையும் அவ அம்மா வீட்ல விடப் போனேன். ஜானு ரொம்ப மெலிஞ்சு இருக்குறத பார்த்து அவங்க அம்மாவால தாங்கிக்க முடியல. என்னையப் பார்த்து 'ஏன் தம்பி, நான் கொடுத்த ஊனையும், உயிரையும் இப்படி உருக்கி எலும்பா கொண்டு வந்து விட்டு இருக்கீங்களே!! பெத்த வயிறு கலங்குது.. இதுக்கா என் பொண்ணு உங்களக் காதலிச்சு கல்யாணம் பண்ணிகிட்டா?' அப்படின்னு கேட்டு அழுதுட்டே உள்ள போயிட்டாங்க. நானும் பதில் சொல்ல முடியாம தலை குனிஞ்சு எங்க வீட்டுக்கு வந்துட்டேன்" என்றார் செந்தில்.

"அப்புறம்??" என்று வருத்தமாய் கேட்டாள் அஞ்சலி.

"நான் தனியா உக்கார்ந்து வருந்திட்டு இருந்தேன்.. அங்கே வந்த என் அப்பா என்னிடம், 'செந்தில்... நீ ஒரு விஷயம் நல்லாப் புரிஞ்சுக்கணும். அம்மா பெருசா இல்ல மனைவி பெருசான்றது எல்லாம் கிடையாது. உன்னய இந்த உலகத்தைப் பார்க்க செய்தது அம்மாதான். வலியோடயும், வேதனையோடயும் பெற்றது அம்மாதான். அவ மேல உயிரா இருக்கிறது நேச்சுரல். ஆனா அதை எந்நேரமும் நீ அவளுக்கு நிரூபிச்சுட்டே இருக்கணும்னு அவசியம் இல்ல. ஆனா மனைவிங்கரவ, உனக்காக உயிரை சுமந்து உன் வம்சம் தழைக்க வைக்கப் போறவ. உன் கூட கடைசி வரைக்கும் வாழப்போறவ. அம்மாவால அம்மாவா மட்டும் தான் இருக்க முடியும், ஆனா மனைவியால அம்மாவாவும் இருக்க முடியும். உங்க ரெண்டு பேரோட உறவை பலப்படுத்த எது தடையாக இருந்தாலும் அதை ஒதுக்கி வை, எதுவா இருந்தாலும் சரி, யாரா இருந்தாலும் சரி' அப்படின்னு சொன்னாங்க.

நான் ரொம்ப அதிர்ச்சியா பார்த்த உடனே அப்பா, 'அம்மாவை ஒதுக்கணும்னு சொல்லல... எங்க கோடு போடணுமோ அங்க கோடு போடுனு சொல்றேன். உன் அம்மாவுக்கு இன்செக்யூரிட்டி ஃபீலிங் அவசியமே இல்ல, நீ ப்ரூவ் பண்ணிட்டே இருக்கனும்னு தேவை இல்ல, உங்க ரெண்டு பேரோட பாசம் யாராலும் அழிக்க முடியாத ஒன்னு. அதே சமயம் உன் சப்போர்ட் மனைவிக்கு இல்லனா அவளுக்கு வர இன்செக்யூர்ட் ஃபீலிங் ரொம்ப ஆபத்தானது. அது உன் குடும்ப நிம்மதியைக் குழைச்சிடும், அடுத்த சந்ததியையும் பாதிக்கும். உனக்கும் உன் மனைவிக்குமான உறவை பலப்படுத்தப் பாரு ஏன்னா நீங்க ரெண்டு பேரும் தான் கடைசி காலம் வரை ஒன்னா இருக்கப் போறீங்க. அம்மா முக்கியம் தான், ஆனா மனைவி தான் ரொம்ப முக்கியம்' அப்படின்னு எனக்கு கொடுத்த அட்வைஸ், எனக்குத் தெளிவும், தெம்பும் குடுத்தது. அப்போ இருந்து நான் ஜானகிக்கு பக்கபலமாக, துணையா இருந்தேன். என் அம்மா கொஞ்ச நாள்ல நல்லாவே மாறிட்டாங்க. அப்புறம் கடைசி காலம்வரை எங்களோட இருந்தாங்க" என்றார் செந்தில்.

“ஏன்மா,இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு இருக்கீங்க, எப்படி என்னோட இவ்வளவு பாசமா உங்களால இருக்க முடியுது?” என்று அஞ்சலி கேட்டாள்.

“மனுஷங்க கிட்ட ரெண்டு விஷயம் கத்துக்கலாம், ஒன்னு எப்படி நடந்துக்கணும்னு, இன்னொன்னு எப்படி நடந்துகக்கூடாதுன்னு, நமக்குள்ள கடவுளும் உண்டு, மிருகமும் உண்டு. எதுக்கு தீனி போட்டு வளர்க்கிறோமோ அது தான் நாம. நான் கடவுளைத் தேர்ந்தெடுத்தேன்” என்று கூறினார்.

“என்னஙக வாங்க. வாங்கி வச்ச கிப்ட்ஸ்ஸ பசங்களுக்குக் கொடுப்போம்” என்று சூழ்நிலையை சகஜமாக்கினார் ஜானகி.

மனோவுக்கும் ப்ரியாவுக்கும் அப்பொழுதுதான் அவர்கள் அப்பா அம்மாவிற்கு வாங்கிய பரிசுப் பொருள் நினைவிற்கு வந்தது. இருவரும் தடதடவென முட்டிமோதி அவரவர் அறையை நோக்கி ஓடினர்.

“நான் தான் முதல்ல கொடுப்பேன்” - மனோவின் சத்தம்.
“நோ..  நான் தாண்டா பஸ்ட்” - பிரியாவின் சத்தம்.



இருவரும் சண்டை போட்டுக்கொண்டு ஓடி வந்தனர். வந்த வேகத்தில் ஜானகி செந்தில் கைகளில் கிப்ட்ஸை அமுக்கினர். செந்திலும் ஜானகியும், மூவருக்கும் வாங்கிய பரிசுகளை அவரவருக்கு கொடுத்தனர்.

அனைவரும் ஒரே நேரத்தில் பரிசுகளைப் பிரித்தனர்.

கண்கள் கசிந்தவாறு, "நான் உங்களுக்கு ஒரு பரிசும் தரலயேமா" என்று அங்கலாய்த்தாள் அஞ்சலி. சற்று முன் மிதமாக ஆரம்பித்த வலி, ஜானகியும் செந்திலும் பதில் கூறுவதற்குள் நன்றாக வலி பிடித்தது அஞ்சலிக்கு.

"அம்மா" என்று அலறிக் கீழே விழப் போனவளை ஜானகியும் செந்திலும் தாங்கிப் பிடித்தனர்.

அஞ்சலியின் சத்தம் கேட்டு ஓடி வந்தனர் மனோவும் பிரியாவும்.

" என்ன ஆச்சு" என்று பதறினான் மனோ.

"மனோ.. வண்டிய எடு.... அப்பா.. நீங்க அந்த டெலிவரி கிட்பாக் எடுங்க.., அஞ்சு, சிட் டவுன்,.. அம்மா, கூட இருங்க.... நான் ஹாஸ்பிடலுக்கு போன் பண்ணிட்டு வரேன்" என்று எல்லோருக்கும் ஆர்டர் போட்டு விட்டு போனை எடுக்க ஓடினாள் பிரியா.

ஐந்து நிமிடத்தில் அனைவரும் காரில் இருந்தனர். மனோ மிகவும் பதட்டமாக இருந்ததால் ப்ரியா காரை ஓட்டினாள். ஜானகியும் செந்திலும் அஞ்சலியின் பக்கத்தில் பரிவாக அமர்ந்து வந்தனர். அடுத்த பத்து நிமிடத்தில் மருத்துவமனை வாசலில் நின்றது அவர்களது கார். பிரியா மருத்துவ உடைமாற்ற ஓடினாள். அமரும் சக்கர நாற்காலியில் அஞ்சலி.., அவளை பின்தொடர்ந்து ஜானகியும், செந்திலும், மனோவும் சென்றனர். டாக்டர் ப்ரியா பிரசவ அறை முன் காத்திருந்தார்.

"டேய் மனோ.. உள்ள வா" என்றாள் பிரியா.

"ஐயோ.. நான் வரல" என்றான் மனோ பயத்துடன்.

"இவன் சொன்னா கேட்க மாட்டான்.. அப்பா , ம்ம்ம்" என்று கண்ணசைத்தாள் பிரியா.

உடனே மனோவை சற்றே பலவந்தமாக பிரசவ அறைக்குள் தள்ளினார் செந்தில்..

ஒரு மணி நேரம் கழிந்தது...



உள்ளிருந்து கேட்ட குழந்தையின் அழுகுரல், ஜானகி, செந்தில் முகத்தில் ஆனந்தக் கண்ணீரையும் குதுகலத்தையும் கொடுத்தது. பிரசவ அறைக் கதவைத் திறந்து பிரியா வருவதை பார்த்தவுடன், "பிரியா. என்ன குழந்தை ஆணா பொண்ணா? அஞ்சலியை

*பார்க்கலாமா?” என்று ஆர்வமாய் கேட்டார் ஜானகி.*

*“அம்மா தாயும் சேயும் நலம். அஞ்சுவே அவ கையால குழந்தைய உங்ககிட்ட கொடுக்கணும்னு ஆசைப்படறா, சோ நீங்களும் ரூம் நம்பர் 36 க்குப் போங்க” என்றாள் பிரியா.*

*ரூம் நம்பர் 36க்கு அஞ்சலியை அழைத்து வந்தார் ஒரு நர்ஸ். குளுக்கோஸ் ட்ரிப்ஸுடன் அசதியாக இருந்தாள் அஞ்சலி. ஓடி வந்து அணைத்துக்கொண்டார் ஜானகி.*

*“ எப்படிம்மா இருக்கு? ரொம்ப கஷ்டப்பட்டியா?” என்று வாஞ்சையுடன் ஜானகி கேட்டார்.*

*“பயங்கரமான வலிமா. இப்போ பரவாயில்ல. குழந்தையோட அழுகையை கேட்டதும் வலி எல்லாம் பறந்தே போயிருச்சு” என்று கூறிச் சிரித்தாள்.*

*மீண்டும் ரூம் நம்பர் 36 இன் கதவு திறந்தது. பிரியா வெள்ளைத்துணியில் இலாவகமாகக் குழந்தையைக் கொண்டு வந்தாள். கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்த அஞ்சலியிடம் குழந்தையை கொடுத்தாள்.*

*“அம்மா, இந்தாங்க உங்க வெட்டிங் டே க்கு என்னோட பரிசு” என்று கூறி குழந்தையை ஜானகியிடம் கொடுத்தாள்.*

*“பேரக்குழந்தையை எங்க கல்யாணநாளும் அதுவுமா பெத்துக் குடுத்திட்டயேம்மா..” என்று தழுதழுப்புடன் கூறி குழந்தையை அள்ளிக் கொண்டார் ஜானகி.*

*“என்னங்க இன்னொரு மஹாலட்சுமி!!’ என்று கூறிக்கொண்டே செந்திலிடம் குழந்தையைக் கொடுத்தார் ஜானகி.*

*“ரொம்ப சந்தோஷம்.. உன்ன மாதிரியே இருக்காம்மா!” என்று கூறி குழந்தைக்கு செந்தில் அன்பு முத்தம் கொடுத்தார்.*

*30 ஆம் ஆண்டு திருமண நாள் கொடுத்த “அடுத்த வாரிசு" ஆனந்தப் பரிசால் பூரித்துப்போயிருந்தனர் ஜானகியும் செந்திலும்.*



***அசைவ உணவகம்:***

**வாடிக்கையாளர்:** என்னய்யா சாப்பாடு இது, கோழிக் கறியில ஈ செத்து கெடக்கு. இத எப்படி மனுஷன் சாப்பிடுறது.
**சப்ளையர்:** இவ்வளவு பெரிய கோழியே செத்து கெடக்கு. இம்மாதுண்டு ‘ஈ’ க்கு போயி இப்படி குதிக்கிற?

# உயிருக்கு நேர்



*- சிவா*

கவலையின்றிப் பிறந்தேன்,
கவனமின்றி வளர்ந்தேன்,
ஏதோ வாழ்ந்தேன்,
உனைக் காணும்வரை.

மாய வித்தைக்காரி
சூனியம் வைத்தாயா?
சுற்றுதடி மனமே,
உன் காலடியை தினமே!

மதிமயக்கும் பார்வைக்காரி,
உன் கண்காந்தம்
இழுத்ததடி இந்த
இரும்பு இதயத்தை!

குயிலின் குரலால்
தேனாய் இனித்தவளே!
மயிலின் ஒயிலால்
மனதை இழுத்தவளே!

வானவில்லை வளைத்து,
விண்மீன்கள் அதில் பதித்து,
ஆரமொன்று செய்திடவா
என் தங்கம் உனக்கு!



கிரகங்களைக் கோர்த்து,
நடுவில் சூரியனும் சேர்த்து,
கழுத்தணி படைத்திடவா
கண்ணே நான் உனக்கு!

ஆசை கிடக்கு நிறைய
அடிமனசு முழுக்க சகியே!
அள்ளிக் கொடுக்க உனக்கு
பொன்னும் பொருளும் இலையே!

மலர்கள் கொண்டு தொடுத்த
மாலை ஒன்று தந்தால்
பூக்கள் வெட்கி வாடிவிடும்
உனைக் கண்டு அதனால்

வார்த்தை கொண்டு தொடுத்த
பாமாலை இதைச் செய்தேன்
சங்கம் வளர்த்த தமிழால்
தங்கம் உனக்குக் கொடுத்தேன்!

# தாய்மொழியின் அவசியம்

சென்ற இதழின் கருத்து மேடை பகுதிக்கான வாசகர் கருத்து



*- நிர்மலா*

இந்த பூமியில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் சமமாக கிடைக்கும் ஒரே ஒரு விஷயம், தாய்மொழி. உலகின் எந்த மூலைமுடுக்கில் குழந்தை பிறந்தாலும் மதம், இனம் மற்றும் அடையாளம் கடந்து அனைத்து குழந்தைகளுக்கும் கிடைக்கும் இன்றியமையாத ஒன்று, தாய்மொழி. தாய் மற்றும் சேயின் முதல் பரிச்சயம் ஆரம்பமாவதும், தாய் மொழியில் தான். இப்படியாக, தாய்மொழியின் சிறப்பைப் பற்றி எழுதிக் கொண்டே இருக்கலாம்.




வெளிநாடுகளில் வாழும் நம்மில் பலர் அதிகம் எதிர்கொள்ளும் கேள்விகள் மற்றும் கூற்றுகள் சில: ஏன் தாய்மொழியை கற்க வேண்டும்? அதற்கான அவசியம் என்ன? தாய்மொழியினை கற்பதனால் என்ன பயன்? "தமிழை கற்றுக் கொள்வது மிகவும் கடினம்", "என் மகனுக்கு தமிழ் பேசத் தெரியாது", "எனக்கு தமிழ் பேசத் தெரியும், ஆனால் எழுதத் தெரியாது". இப்படியாக, நாம் தினம் தினம் சந்திக்கும் நபர்களின் கூற்றுகளை உண்மை என எண்ணி ஏமாற்றமடைகிறோம். தொடர்ந்து கூறப்படும் இவ்விதமான எதிர்மறை கருத்துக்களை நம்மை அறியாமல் ஏற்றுக்கொண்டு அதை மற்றவர்க்கும் பகிர்கிறோம்.

எனக்கு பிரெஞ்சு மொழி நன்றாக எழுத மற்றும் பேசத் தெரியும். பிரெஞ்சு மொழியை எப்படியாவது என்னுடைய மகனுக்கு கற்றுத் தர வேண்டும் என எண்ணி நான் எடுத்த முயற்சிகள் பல. அவனும் ஒரு சில வார்த்தைகள் பேசுவான், பின்பு மறந்து விடுவான். பரவாயில்லை என நானும் விட்டு விட்டேன். இந்த வருட விடுமுறை நாட்களில், தமிழ் கற்றுக் கொடுக்க முயற்சி எடுத்தேன். தமிழ் படிக்கலாம் வா என்றால், உடனே வந்து விடுவான். இப்படியாக சென்ற எங்கள் தமிழ் கற்கும் முயற்சியில், நல்ல முன்னேற்றம் அடைந்தான். பிரெஞ்சு மொழியை கற்றதற்கும், தமிழ் மொழியை கற்றதற்கும் நிறைய வித்தியாசம் (தமிழ் தாய்மொழி அல்லவா!).




இதை இங்கே பதிவதற்கான காரணம் என்னவென்றால், தாய்மொழியை கற்றுக் கொள்வதற்கான ஆர்வம் அவர்களுக்கு இயற்கையாகவே உள்ளது என்பதை புரிந்துக் கொண்டேன். புரிந்துக் கொள்ளும் திறமை, கிரகித்தல் மற்றும் கற்பனைத் திறமை மேன்மையடைவதை உணர முடிந்தது. அவர்களுக்கு இவ்வளவு தமிழ் தெரியும்/ புரியும் என்பதும் ஆச்சரியமே. தாய்மொழியை கற்றுக் கொடுப்பதற்கான ஒரு சூழல் மட்டுமே பெற்றோர்களான நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மற்றவைகளை, அவர்கள் எதிர் கொள்வார்கள். உதவி வேண்டும் என்ற பட்சத்தில் மட்டும், உதவி செய்வதற்கு தயாராக இருங்கள்.

உறவு பலம் பெறுவது, தாய்மொழியில் பேசும் பொழுது மட்டும் தான்.

வாழ்க தமிழ், வளர்க தமிழ்!

## ஸ்மார்ட் போனும், நாமும் !!



*-மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்*

கருத்துமேடையில் கருத்து மட்டும் தான் சொல்லணுமா என்ன?? ஒரு வித்தியாசத்துக்கு நான் கதை சொல்லப் போறேன்...

இரவு 12 மணி.

இப்படி சொன்ன உடனே பேய் கதைன்னு நெனைச்சுடாதீங்க.. இது சிங்கம் கதை.

'டிங் டிங்' எனச் சத்தம் - தூங்கிட்டிருந்த சிங்கக்குட்டி கண் திறந்து பார்த்துச்சு. சார்ஜ் போட்டிருந்த ஸ்மார்ட்போன் மின்னிட்டிருந்துச்சு. ஏதோ வாட்ஸப்ல மெசேஜ் வந்திருக்கு. 'இந்த நேரத்துல யாரா இருக்கும்'னு யோசிச்சுக்கிட்டே சிங்கக்குட்டி எழுந்துச்சு. வாட்ஸ்அப்பை ஓப்பன் பண்ணிப் பார்த்தால், அட.. அம்மாகிட்டயிருந்து 'ஹேப்பி பர்த்டே'னு மெசேஜ். சிங்கக்குட்டியின் முகம், 1000 ஸ்மைலிகள் ஒண்ணு சேர்ந்தால் எப்படி இருக்குமோ அப்படி மாறிருச்சு. இதே குகையின் பக்கத்து அறையிலிருந்துதான் அம்மா சிங்கம் மெசேஜ் அனுப்பி இருக்காங்க. 'தேங்யூ... லவ் யூ அம்மா'னு ரிப்ளை பண்ணுச்சு சிங்கக்குட்டி. அப்புறம், கொட்டாவி விட்டுக்கிட்டே படுத்திருச்சு.

சிங்கக்குட்டி எப்பவுமே தாமதமாகத்தான் எழுந்திருக்கும். அதேபோல, பர்த்டே அண்ணைக்கும் தாமதமாகத்தான் கண்ணை முழுச்சுது. பார்த்தால்... சிங்கக்குட்டியின் கட்டிலைச் சுற்றி அதனுடைய நண்பர்கள். புலிக்குட்டி புஜ்ஜிமா, சிறுத்தைக்குட்டி ஷிவ், கரடிக்குட்டி கௌஷி, மான்குட்டி மிருதுவ் என எல்லோரும் கையில் ஒரு பூ வெச்சிருந்தாங்க. மஞ்சள், சிவப்பு, வயலட் என விதவிதமான கலரில், விதவிதமான மலர்கள். ``ஹேப்பி பர்த்டே ஜூட்டு''னு ஒரே குரலில் சொன்னாங்க. அப்பா, அம்மா சிங்கங்களும் வாழ்த்து சொன்னாங்க. ``சீக்கிரம் முகம் கழுவிட்டு வா''னு சொல்லிக்கிட்டே ஒரு பெரிய ஃப்ரூட் கேக்கை டேபிள் மேலே வெச்சாங்க. சிங்கக்குட்டிக்கு ஒரே குஷி. ஓடிப்போய்ப் பல் விளக்கி, முகம் கழுவிட்டு வந்துச்சு. மெழுகுவத்தியை ஏற்றி, எல்லோரும் ஹேப்பி பர்த்டே பாட்டுப் பாடினதும், சிங்கக்குட்டி கேக் வெட்டுச்சு. இதை வந்திருந்த ஃப்ரெண்டு ஒவ்வொன்னும் அவங்க ஸ்மார்ட்போனில் வீடியோ எடுத்துச்சுங்க. உடனடியா ஃபேஸ்புக்ல அப்லோடு செஞ்சதும், காடு முழுக்கப் பரவிச்சு. எக்கச்சக்கமா லைக்ஸ் குவிய ஆரம்பிச்சுருச்சு. சிங்கக் குட்டிக்கு ஃபேஸ்புக், வாட்ஸ்அப், ட்விட்டர் என எல்லாத்திலும் வாழ்த்து குவிஞ்சுட்டே இருந்துச்சு. அண்ணைக்குப் பரிசா வந்த ஒரு ஐ-போனில் குவியும் லைக்ஸைப் பார்த்துக்கிட்டே கால் போன போக்கில் நடக்க ஆரம்பிச்சது சிங்கக்குட்டி. .

எவ்வளவு தூரம் நடந்துச்சுன்னு அதுக்கே தெரியலை. ஓர் ஆறு குறுக்கிடவும் சட்டுனு நின்னு, சுற்றிலும் பார்த்துச்சு. 'அடடா... ரொம்பத் தூரம் நடந்து வந்துட்டோம் போலிருக்கே, எப்படி வந்தோம். இப்போ,

எந்தப் பக்கம் திரும்பிப் போகணும்'னு ஒரு நொடி குழம்பிப் போச்சு. 'அட... நம்ம கையில்தான் ஸ்மார்ட்போன் இருக்கே. மேப் போட்டுப் பார்த்துருவோம்'னு நினைச்சது. ஆனால், `நெட் ஒர்க்' கனெக்ட் ஆகலை. சுத்துது... சுத்துது... ரொம்ப நேரமா சுத்திட்டே இருக்கு. அது மட்டுமா? 'யுவர் சார்ஜ் இஸ் டௌவுன்' என எச்சரிக்குது. 'அடச்சே'ன்னு சிங்கக்குட்டி வெறுத்துப்போச்சு. அப்போது, புதர் மறைவில் ஏதோ ஒரு சலசலப்பு. சிங்கக்குட்டி பயத்துடன் பார்த்துட்டு இருக்கும்போதே, மூன்று ஓநாய்கள் வெளியே வந்துச்சு. 'உர்ர்ர்ர்'னு வெறிப் பார்வையில் சிங்கக்குட்டியைச் சுற்றி நின்னுடுச்சுங்க. ராஜா மகனே... வசமா மாட்டினியா? உன் அப்பன் பெரிய பலசாலி. தான் வெச்சதே சட்டம்னு எங்க கூட்டத்தை அடிக்கடி தொந்தரவு பண்ணிட்டே இருக்கான். அவனுக்குச் சரியான பாடம் புகட்டப்போறோம்''னு சொல்லிச்சு ஓர் ஓநாய். சிங்கக்குட்டிக்கு அழுகையே வந்திருச்சு. அப்போ, 'கிர்ர்ர்ர்ர்ர்ர்'னு ஓர் இடிச் சத்தம். ஒரு மரத்து மேலிருந்து தொப்புனு குதிச்சது கரடி. ஓநாய்களைப் பார்த்து அது போட்ட சத்தத்தில், தரையில் புழுதியே பறந்துச்சு. புழுதி அடங்கிப் பார்த்தால், ஓநாய்களைக் காணலை, தலை தெறிக்க ஓடிப்போய்விட்டன.

சிங்கக்குட்டி முகத்தில் நிம்மதி. அது கரடியைப் பார்த்து, 'ரொம்ப நன்றி கரடி மாமா'னு சொல்லிச்சு. ``இப்படித் தனியா இவ்வளவு தூரம் வரலாமா?''னு கரடி கேட்க, ``ஸாரி மாமா. போன்ல வந்த மெஸேஜைப் பார்த்துட்டே வந்ததில் தூரத்தைக் கவனிக்கலை''னு சொல்லிச்சு சிங்கக்குட்டி. ``ஒரு விஷயத்தில் ஆர்வம் இருக்க வேண்டியதுதான். அதுக்காக, அடிமையாகிடக் கூடாது. சரி சரி பார்த்துப் போ''னு கரடி சொல்ல, ``மா... மாமா வழி தெரியலை. மேப்பும் ஒர்க் ஆகலை''னு தயங்கிட்டே சொல்லிச்சு சிங்கக்குட்டி. ``சரியா போச்சு. அப்போ, இந்த ஸ்மார்ட்போன்தான் உன்னுடைய மூளை. இதைக் கையிலிருந்து வாங்கிட்டால், நீ வெறும் பூஜ்ஜியமா? எல்லாத்துக்கும் தொழில்நுட்பத்தை மட்டுமே நம்பிட்டு இருக்கக் கூடாது. நம்ம மூளையைவிட உலகில் பெரிய ஆற்றல் கருவி இல்லை. அதைப் பயன்படுத்தனும். ஆனால், கையில் இருக்கிற ஒரு சிறிய கருவியிடம் அதை அடமானம் வெச்சுடறீங்களே. இது எப்படி இருக்கு தெரியுமா? நம்மகிட்டே வேலைக்கு வந்த வேலைக்காரனிடமே எல்லாத்தையும் ஒப்படைச்சுட்டு அவனுக்கு அடிமையான மாதிரி இருக்கு'' எனச் சிரிச்சது கரடி.



சிங்கக்குட்டியால் பதில் பேசமுடியாமல் தலைகுனிச்சு நின்னுச்சு. ``சரி, சரி வா''னு கரடி நடக்க, ``கொஞ்சம் இருங்க மாமா... நான் முன்னாடி நடக்கறேன். எப்படிப் போகணும்னு யோசிச்சு, கவனிச்சு நடக்கறேன். எங்காவது தப்பா மாறினால் மட்டும் நீங்க வழிகாட்டுங்க''னு சொல்லிச்சு சிங்கக்குட்டி. கரடியும் ஒரு புன்னகையோடு

பின்னால் நகர, நம்ம சிங்கக்குட்டி கையிலிருந்த ஸ்மார்ட்போனை ஆஃப் பண்ணிட்டு நடக்க ஆரம்பிச்சது.

இந்த கதையில் என்ன கருத்து சொல்லி இருக்குனு நான் தனியா உங்களுக்கு சொல்லத் தேவை இல்லை.

★AmericanAir★
Protecting Your Comfort Since 1989
We're proud to be American Air!
- Locally Owned & Operated
- Serving Central Ohio for Over 30 Years
- Licensed, Bonded & Insured
- Full Service Heating, Cooling & Electric
- A+ Rating with BBB
- 24-Hour Emergency Service
(614) 851-0099 | https://americanairheating.com

இது ஸ்மார்ட் போன் உலகம், பாட்டி தாத்தாக்கு, பேரன் பேத்தி போன் பயன்படுத்துறதை பார்த்து ஒரே பெருமையா இருக்கு. இந்த வளர்ச்சிக்கு இடையில் நம்ம கவனிக்க தவறிய விஷயம் தான் நிதானம். இன்றைக்கு வாழ்க்கை ஓட்டப்பந்தயம் போல் ஆகிவிட்டது. அதிவேக இரயில், துரித உணவகம் என்று வாழ்க்கை நிமிடங்களில் ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆனால் நம் குழந்தை பருவம் இதுபோன்றது இல்லை. நாம் நம் வாழ்வை நம்மை சுற்றி இருந்தவற்றை நிறுத்தி நிதானமாக ரசித்து வளர்ந்தோம். அந்த நிதானம் இன்று நம்ம குழந்தைகளிடம் இல்லை. ஸ்மார்ட் போனில் விளையாடும் அதிவேக விளையாட்டுகள், பார்க்கும் குழந்தைகள் படங்கள், தினசரி வாழ்க்கையில் வெளியில் பார்க்கும் பரபரப்பு என்று அனைத்தும் அவர்களுக்கு வேகத்தை கற்றுக்கொடுக்கிறது. இந்த வேகம் நாளடைவில் அவர்களிடம் இருக்கும் பொறுமையை அழித்துவிடும். நாளை நீங்கள் எதை கூறினாலும் நின்று கேட்கும் பொறுமை அவர்களிடம் இல்லாமல் போய்விடும்.

எனவே காலம் கடக்கும் முன் நம் குழந்தைகளுக்கு சிறிது நிதானத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டியது பெற்றோரின் கடமை. எவ்வளவு பரபரப்பான காலை வேளையிலும் சில வீடுகளில் அப்பா நிதானமாக செய்தித்தாள் படித்துக்கொண்டு இருப்பார். அது அவருக்கு அவருடைய அப்பாவிடம் இருந்த வந்த பழக்கமாக இருக்கும். இந்த அதிவேக உலகத்தில் உங்கள் குழந்தைகளுக்கு நிறுத்தி நிதானமாக புத்தகம் படிக்க சொல்லிக்கொடுங்கள்.

நூல்கள் படிப்பதை புலனறி வழக்கம் என்பர். வாசிக்கும் பழக்கம் மனதை இலகுவாக்கும், வாழ்வை வளமாக்கும். இந்த கணினி யுகத்தில் இணையத்தில் உலவும் இளைய சமூகம் இழந்த சொர்க்கம் வாசிக்கும் பழக்கம். மேலை நாடுகளில் கூட புத்தகம் படிப்பது குறைந்து விட்டதாக தகவல்கள் வருகின்றன. முன்பெல்லாம் கையில் புத்தகங்களுடன் செல்வதைப் பெருமையாக கருதுவார்கள். ஆனால் அந்த இடத்தை செல்போனும், லேப்டாப்பும் பறித்துக் கொண்டு விட்டன. விளைவு, புத்தக வாசிப்பு என்பது

கிட்டத்தட்ட இல்லாத ஒன்றாக மாறி வருகிறது. ஒருவன் எவ்வளவு சிறந்தவன் என்பதை அவன் வாசிக்கும் புத்தகங்களை வைத்துச் சொல்லலாம் என்பார்கள். வீடு தோறும் சிறிய அளவிலான நூலகமாவது இருக்க வேண்டும் என்று அக்காலத்தில் வலியுறுத்தினார்கள், அதன்படியே இருந்தும் வந்தார்கள். ஆனால் இன்று அதெல்லாம் இல்லாமல் போய் விட்டது.

யாரோ கற்பனையில் உருவாக்கும் படங்களை காட்டுவதை விட ஒரு புத்தகத்தை கொடுத்து அவர்களின் கற்பனை உலகத்தை திறந்து விடுங்கள். நாம் படித்த மாயாவி கதைகளும், என்றும் முடியாத சிந்துபாத் கதைகளும் நம்மை அழைத்து சென்ற கற்பனை உலகத்தில் நம் பிள்ளைகளும் பயணப்படட்டும். புத்தகம் படிக்கும் பழக்கம் நம் பிள்ளைகளுக்கு சிந்திக்க கற்றுக்கொடுக்கும், கற்பனைத் திறனை வளர்க்கும், எப்பொழுதும் பரபரவென இருக்கும் அவர்களின் மூளையை நிறுத்தி நிதானமாக செயல்பட வைக்கும். இந்த பழக்கம் குழந்தைகளுக்கு ஏற்படும் கவனச் சிதறல்களை சரிசெய்ய உதவும்.

முதலில் அவர்களுக்கு படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள், பின் அந்த புத்தகங்களின் மூலம் பெருந்தலைவர்களையும், சாதனையாளர்களையும், உலகின் பல்வேறு மாறுபட்ட மக்களையும் உங்கள் குழந்தைகள் தெரிந்து கொள்ளுவார்கள். பாட புத்தகம் உங்கள் குழந்தையின் அறிவை வளர்க்கும், மற்ற புத்தகங்கள் அவர்களின் சிந்திக்கும் திறனை, முடிவெடுக்கும் ஆற்றலை, மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டு யோசிக்கும் திறமையை கொடுக்கும். உங்கள் குழந்தைகள் 1000 பேர் இருக்கும் இடத்தில் அவர்களின் சிந்தனையால் தனித்து தெரியவேண்டும் என்று நீங்கள் ஆசைப்பட்டால் இன்று அவர்கள் கையில் ஸ்மார்ட் போனிற்கு பதிலாக புத்தகத்தைக் கொடுங்கள்.



குழந்தைங்களுக்கு மட்டும் இல்ல, நமக்கும் கூட முக்கியமான தொலைபேசி எண்களை ஞாபகம் வெச்சுக்குற, இல்ல எழுதி வைக்குற பழக்கம் இல்லாம போயிடுச்சு. உங்க குழந்தைகளுக்கு பெற்றோர், அவங்களை தொடர்பு கொள்ள முடியலைன்னா அடுத்து தெரிய வேண்டிய நண்பர், உறவினர் தொலைபேசி எண்களை மனப்பாடம் செய்ய கத்துக்கொடுங்க. நீங்களும் உங்க குழந்தையின் பள்ளி மற்றும் பிற வகுப்புக்கு போற இடங்களோட எண்களை நினைவில் வெச்சுக்கோங்க. நம் மூளைக்கு சார்ஜ் போடணுங்குற பிரச்சனை எல்லாம் கிடையாது, தொழில்நுட்பம் நமக்கு உதவ மட்டும் தான். நம் சிந்தனை திறனை அது அழித்துவிடாமல் பார்த்துகொள்வது அவசியம்.

உங்கள் வாழ்வில் ஸ்மார்ட் போன் வந்த பிறகு ஏற்பட்ட மாற்றங்களை எங்களோடு கருத்து மேடையில் பகிருங்கள். **(ctstamilthinnai@gmail.com).**

# சமைக்க ருசிக்க

## இறால் வறுவல்



*-முருகானந்தன் சின்னச்சாமி*

**தேவையான பொருட்கள்:**

கடலில் பிடித்த இறால் – நானூறு கிராம்
(பண்ணையில் வளர்த்தது வேண்டாமே)
மிளகாய்ப்பொடி – 1 தேக்கரண்டி
மஞ்சப்பொடி – 1/2 தேக்கரண்டி
உப்பு – 1 தேக்கரண்டி
கருவேப்பிலை கொத்து – 1
தேங்காய் எண்ணெய் – 2 மேசைக்கரண்டி



**செய்முறை:**

1. இறாலை சுத்தமாக கழுவி, மிளகாய்ப்பொடி, மஞ்சப்பொடி, உப்பு, எலுமிச்சை சாறு கலந்து ஒரு அரைமணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும்.
2. வடைச்சட்டியில் தேங்காய்எண்ணெய் ஊத்தி, கருவேப்பிலை போட்டு பொரிக்கவும்
3. ஊறவச்ச இறால போட்டு நன்றாக வதக்கி, பொடி வாசம் போனவுடன் இறக்கவும்.

## அன்னாசிப் பழ கேசரி



*-லாவண்யா எதுராஜுலுனைடு சுதர்சன்*

**தேவையான பொருட்கள்:**

ரவை – 1 கப்

சர்க்கரை (சீனி)– 1 ½ கப்

அன்னாசிப் பழம் - 1 கப் (½ கப் சர்க்கரை சேர்த்து ஊற வைக்கவும்)

ஏலக்காய் – 4

நெய் – 4 மேசைக் கரண்டி (4 tablespoon)

முந்திரி, திராட்சை – தேவையான அளவு

உப்பு – 1 சிட்டிகை (1 pinch)

தண்ணீர் – 2 கப் (1:2 அளவு)



**செய்முறை:**

1. ஒரு Non Stick கடாயில் (Non Stick pan) 3 மேசைக் கரண்டி நெய் சேர்த்து, முந்திரி, திராட்சை வறுத்து – தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

2. அதே கடாயில் மீதமுள்ள நெய்யில் ஏலக்காய் மற்றும் ரவை சேர்த்து நன்றாக வறுத்துக் கொள்ளவும்.
3. வறுத்த பின்னர் - 2 கப் சூடான தண்ணீர் சேர்த்து நன்றாக சேர்ந்து வரும் வரை கிளறவும்.
4. ரவை நன்றாக சேர்ந்து வந்த பின்னர், சர்க்கரையில் ஊற வைத்த அன்னாசிப் பழத்தை சேர்த்து கிளறவும். இந்த கலவை, ஒரு பசை போல் ஆகும் வரை கிளறவும்.
5. கடைசியில் மீதமுள்ள நெய் சேர்த்து கொள்ளவும். பிறகு வறுத்த முந்திரி, திராட்சை சேர்க்கவும்

*பி.குறிப்பு: உங்களுக்கு தேவை என்றால், மஞ்சள் நிற உணவு வண்ணம் சேர்க்கலாம். உணவு வண்ணத்தை, சூடான தண்ணீரில் கலந்து ரவையில் சேர்க்கவும் (குறிப்பு எண்: 3).*

E2 INFOSYSTEMS

**என் பையனுக்கு இப்பெல்லாம் மாஸ்க் மேல கோவம் வர்து"**

**" என்னாது? மாஸ்க் மேலயா?"**

**" மூக்கு மேலதான் கோவம் வரும்.ஆனா இப்பதான் மூக்கு மேல மாஸ்க் போட்டிருக்கானே..அதான் அப்டி சொன்னேன்"**

ஆழக் குழி தோண்டி,
அதிலே ஒரு முட்டை
இட்டு, அண்ணாந்து
பார்த்தால்
தொண்ணூறு முட்டை

bestbrains

# பட்டத்து யானை, குற்றப் பரம்பரை - ஆசிரியர் வேல ராமமூர்த்தி



- *முருகானந்தன் சின்னச்சாமி*

பட்டத்து யானை, குற்றப்பரம்பரை

உலகமே ஆடிப்போய், நான்கு சுவர்களுக்குள் அடங்கி வாழும் இந்த நேரத்தில் நடிகர், எழுத்தாளர் வேல ராமமூர்த்தி அவர்கள் எழுதிய, சமைத்த, ஆக்கிய, வடித்த, உயிர் கொடுத்த இரண்டு புத்தகங்களும் எனக்குக் கிடைத்தன.

ஒவ்வொரு சொல்லும் வரியும் என்னை என்னென்னவோ செய்தன. பல நினைவுகளை என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வெளிக்கொண்டு வந்தன.

என் பார்வையில் இரண்டு நூல்களுக்கும் மையக்கரு ஒன்றுதான். வீரம் தோற்பதில்லை நேருக்கு நேர் நின்று போராடும் வரை. வஞ்சகத்தால் தான் பல வீரர்கள் வீழ்ந்திருக்கிறார்கள்.

கதையுடன் கதைக்களமும் என் காதுகளில் ஏதேதோ சொல்லியது. அந்தக் கால மக்களின் மனநிலை, உணவுகள், உணர்ச்சிகள், ஊர்கள், ஊரணிகள், சத்திரங்கள், சாலைகள், பாலங்கள் என்று வரலாற்றுடன் புவியியலும் சேர்த்து விருந்து படைத்திருக்கிறார் ஆசிரியர்.

பட்டத்து யானை:

தொடக்கம் முதல் விறுவிறுப்பு. பாதி நூல் படிக்கும் முன்னர், ஆசிரியரைப் பாராட்ட ஆசை. அழைத்தேன், பேசினேன்.

வெள்ளையர்களை எதிர்த்தவர்களின் கதி பற்றி சொல்லும்போது, “சிறை சென்று செக்கிழுத்து, தொழுநோய்வாய்ப்பட்டு, இற்று வெளியேறிய அந்த வீர புருஷர்களை வரவேற்க, வாசலில் ஒரு நாய்க்குட்டி கூட வாலாட்டிக்கொண்டு நிற்கவில்லை” என்ற அவரின் வேதனை நிறைந்த வரிகள் நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் குத்தின.




அந்தமானுக்கு நாடு கடத்தப்பட்ட மாயழகி, துரைசிங்கம் என்ன ஆனார்கள் என்ற கேள்வி தினமும் என் நெஞ்சில்.

கடைசியில் கொஞ்ச பக்கங்கள் காணோமே என்று புரட்டி புரட்டி பார்த்தேன். உடையப்பன் எப்படி பெருநாழி ரணசிங்கத்தை வஞ்சகத்தால் வீழ்த்தினான் என்று காணவில்லை. வாசகர்கள் கற்பனைக்கு விட்டுவிட்டார் என்று நினைக்கிறேன்.

குற்றப்பரம்பரை:
காட்டிக்கொடுப்பவர்களும்,
கூட்டிக்கொடுப்பவர்களும் மனித
குலத்தின் மிகப் பெரும் சாபம். எல்லா
நாடுகளிலும், எல்லா காலகட்டங்களிலும்
இருந்திருக்கிறார்கள்.
ஒரு வேறுபட்ட ராமநாதபுர
மாவட்டத்தை கண்முன் கொண்டு வந்து
நிறுத்துகிறது இந்த நாவல். “கஞ்சித்தொட்டி”
என்று கிண்டல் செய்யப்படும் ஒரு
மாவட்டம், வீரத்தின் விளைநிலமாக இருந்த
காலத்தில் நடந்த கதை.




வெள்ளையரின் பிரித்தாளும் சூழ்ச்சி எங்கும்
போல இங்கும் நடந்தேறுகிறது.
கொம்பூதிக்கூட்டத்தின் தலைவன்
”வேயண்ணா” வின் வீரமும்
விவேகமும் வியக்கவைக்கிறது.
கூழானிக்கிழவி, அந்த தலைவனின் தாய்.
வில்லாயுதமும், வையத்துரையும்
சிங்கங்களாக சீறுகிறார்கள். அன்னமயில், ஒரு
அழகு மயில், அமைதிக்குயில்.

கள்ளமில்லா ஒரு கூட்டத்தின் அன்பு, காதல்,
பாசம், காமம், வீரம், நாணயம் நூல் முழுக்க
தென்றலாக வீசுகிறது. அல்லிப்பூவுக்கும்,
அரளிப்பூவுக்கும்
வித்தியாசம் தெரியலேயே என்று கிழவி புலம்
புவது நம் காதில் ஒலித்துக் கொண்டே
இருக்கிறது.

தீண்டாமை எப்படி விதைக்கப்பட்டு,
வளர்க்கப்பட்டது மற்றும்
வளர்க்கப்படுகிறது என்பதைப் பற்றி
படிக்கையில் மிஞ்சுவதும்,
எஞ்சுவதும் வேதனை தான்.
இனியாவது மறையுமா என்ற கேள்விக்கு
காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

பெருநாழி, பெரும்பச்சேரி சென்று
பார்க்கவேண்டும், அந்த மக்களுடன் பேச
வேண்டும், கதை பல கேட்க வேண்டும்
போன்ற என் மனதில் தோன்றிய புதிய
எண்ணங்களுக்கு தீனி போட்ட ஆசிரியருக்கு,
அவர் எழுத்துக்கு, தமிழுக்கு நன்றி

*நண்பன் 1: எங்க மேனேஜர் இப்ப லஞ்சம்னு
கை நீட்டறதே கிடையாது.
நண்பன் 2: ஏன், திருந்திட்டாரா?
நண்பன் 1: நீ வேற, கொரோனா பயத்துல
எல்லாமே இ-பே பண்ணச் சொல்லிடறாரு!*



# கொலம்பஸ் தமிழ்ச் சங்கச் செய்திகள்



**-பாலாஜி சிவக்குமார்**

இந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து நாம் எல்லோரும் நம்மை நாமே வீட்டிற்குள் தனிமைபடுத்திக் கொண்டு "கொரோனா" எனும் அரக்கனை பரவவிடாமல் தடுத்தோம். இதற்காக சாரல் ஆசிரியர் குழுவின் சார்பில் கொலம்பஸ் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஒரு "சபாஷ்".

தற்போதுள்ள சவாலான காலகட்டத்தில், நம் கொலம்பஸ் தமிழ் சங்கம் தமிழ் மக்களின் நலன், சமூக அக்கறை மற்றும் கொலம்பஸ் தமிழ் குழந்தைகளின் தமிழார்வம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கீழ்கண்ட முயற்சிகளை மேற்கொண்டது,

**தமிழ் மக்களின் நலன் – கோவிட் 19 நிவாரண நிதி திரட்டல்**

"கொரோனா"வின் கோர தாண்டவத்தால், நம் தமிழகத்தில் பல சிறு நிறுவனம் நடத்துபவர்கள், சிறு விவசாயிகள் மற்றும் தெருவோர வியாபாரிகள் ஆகியோரின் வாழ்வாதாரம் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களிலுள்ள இத்தகைய வியாபாரிகளுக்கு உதவுவதற்காக நம் கொலம்பஸ் தமிழ் சங்கம் "எய்ட் இந்தியா" எனும் தொண்டு நிறுவனத்துடன் கைகோர்த்து நம் கொலம்பஸ் தமிழ் மக்களிடம் நிதி திரட்டுகின்றது.

இதன் மூலம் சுமார் ஐயாயிரம் கிராமப்புற சிறு வியாபாரிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் கொடுக்கும் நிவாரண நிதியைக் கொண்டு "எய்ட் இந்தியா" பாதிக்கப்பட்டவர்கள் திரும்பவும் மீண்டு தன் தொழிலைத் தொடர, 3000 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரை கொடுத்து உதவும்.




இந்த உன்னதமான முயற்ச்சிக்கு உங்களால் முடிந்த உதவியை செய்ய வேண்டுமென கொலம்பஸ் தமிழ் சங்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**நன்றி நவிழ்தல் – மருத்துவ பணியாளர்களுக்கு உணவு பரிமாறும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது**

இந்த "கொரோனா"வின் சவாலான கால கட்டத்தில், நம் எல்லோரின் உடல் நலத்தைக் காக்க தன் உயிரையும் பொருட்படுத்தாது சிப்பாய்களாக முன்னணியில் நின்று போராடுகின்ற மருத்துவப் பணியாளர்களை நாம் கண்டிப்பாக பாராட்டியே ஆக வேண்டும்.

அவர்களுக்கு ஒரு சிறு நன்றி தெரிவிக்கும் விதமாக, கொலம்பஸ் தமிழ் சங்கத்தின் சார்பாக மே மாதம், "மவுண்ட் கார்மல் புனித அன்னாள் (St. Ann's) மருத்துவமனையிலுள்ள பணியாளர்களுக்கு ஒரு நாள் மதிய மற்றும் இரவு வேளை உணவு வழங்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.




இந்த நற்செயல் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

**கொலம்பஸ் தமிழ் குழந்தைகளின் தமிழார்வம் – திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி போட்டி**

கொலம்பஸ் தமிழ் குழந்தைகளின் தமிழார்வத்தை மேம்படுத்த ஒவ்வொரு வருடமும் கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் சார்பில் திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி போட்டி நடத்தி பணமுடிப்பு வழங்குவது வழக்கம். ஆனால், இந்த வருடம் "கொரோனா"வின் காரணமாக, இந்தப் போட்டி நிகழ்நிலையில் (Online) ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அறுபதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்று திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடியை தம் மழலைத் தமிழில் ஒப்பித்தனர்.




இந்த நிகழ்ச்சி கொலம்பஸ் தமிழ் மக்களின் பேராதரவுடன் வெற்றிகரமாக நடந்தேறியது. இந்த சவாலான தருணத்திலும், கொலம்பஸ் தமிழ் சங்கம் இந்நிகழ்ச்சியை நடத்தியது அனைத்து பெற்றோர்களாலும் வெகுவாக பாராட்டப்பட்டது.

*அர்ச்சனா தனது விவசாய மாமாவின் வீட்டிற்கு விடுமுறைக்கு சென்றாள். அவரது பண்ணையில் பறவைகளும் மாடுகளுமே உள்ளதைப் பார்த்தாள். மாமாவிடம் எத்தனை பறவைகள், மாடுகள் உள்ளன என்று கேட்டாள். மாமாவோ விடையை கேள்வியாக சொன்னார். நீங்கள் அவளுக்கு விடை கண்டு பிடிக்க உதவுங்கள். அவர் கூறியது – "இங்கு 30 தலைகளும், 100 கால்களும் உள்ளன".*

FCBank

A DIVISION OF CNB BANK

# எனது கனவுத் தோட்டம்
## பகுதி -1 சமுதாயத் தோட்டம்
## *(Community Garden)*



- *ஜெகதீஸ்வரன் கணேசன்*

சிறு வயதில் ஒரு ஓட்டு வீடு, அருகில் மரம், சுற்றியும் பச்சைப் புல்வெளி, தொலைவில் மலை, தென்னை மரங்கள், நதி, நீல வானம், பறக்கும் பறவைகள், எத்தனை தடவை இதை ஆசை ஆசையாய் வரைந்து இருப்போம். இந்த ஆசை இன்றும் நம்மில் பலருக்கு உண்டு!

சொந்த ஊரில் சிலர் தோட்டம் வைத்து, செடிகொடிகளோடு அளவளாவி, செடி துளிர்விடும் பொழுது மெய்சிலிர்த்து, அதில் பூக்கள் பூக்கும் பொழுது பூரித்து மகிழ்ந்திருந்திருப்பர்.

சிலருக்கு ஆசையிருந்தும் வாய்ப்பில்லாததால், நண்பர்கள் அவர்களுடைய தோட்டம் பற்றி போடும் காணொளி கண்டு ஒருவாறு மகிழ்ந்திருந்திருப்பர்.

ஆனால் தற்போது அடுக்குமாடி குடியிருப்பில் ஆங்காங்கு பூத்தொட்டிகளை வைத்து அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்கிறோம். அப்படி வளர்க்கும் செடிகள், பூத்துக் குலுங்கினால் நமக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி. அது மட்டுமா, அதில் வளர்ந்தப் பூக்கள் மற்றும் காய்கறிகளை அருகில் உள்ளவர்களுக்கும், பக்கத்துக்கு வீட்டுக்காரர்களுக்கும் கொடுக்கும் போது எவ்வளவு பெருமையாக இருக்கும்.

நமக்கு ஒரு சின்ன இடம் இருந்தால் எப்படி இருக்கும்? என்ற உங்கள் மனத் தேடலுக்கு, நாங்கள் அறிந்த தகவல்களை இந்தப்பகுதியில் தர விளைந்திருக்கிறோம்.

**சமுதாயத் தோட்டம் (Community Garden in Columbus Ohio area):**

சமுதாயத் தோட்டம் என்பது ஒரு பெரிய நிலப்பகுதி. அந்த நிலப்பகுதி, சிறு சிறு நிலப்பகுதிகளாக பிரிக்கப்பட்டு அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அவரவர் தேவைக்கேற்ப தோட்டம் அமைத்துக் கொள்ள, தன்னார்வத் தொண்டு நிறுவனத்தாலோ அல்லது சமூக மையத்தாலோ வழங்கப்படுகிறது. சில இடங்களில், பயனாளர் ஒரு சிறு தொகையை வாடகையாக செலுத்த வேண்டியிருக்கும் .



நாம் வசிக்கும் பகுதியில் உள்ள சமூக மையத்தில்(Community Center) சமுதாயத் தோட்டம் பற்றிய விவரங்களைக் கேட்டறியலாம். இப்பகுதியில் எங்களுக்கு

தெரிந்த இடங்களிலுள்ள சமுதாயத் தோட்டம் பற்றிய விவரங்களை அளித்திருக்கிறோம்.

*Dublin Community- https://dublinohiousa.gov/parks-open-space/community-garden/*

*Dublin St John Church - http://stjohndublin.org/community/community-garden/*

*Dublin Redeemer Moravian Church - https://redeemermoravian.org/redeemer-community-garden/*

*Hilliard Community - https://hilliardohio.gov/community-garden/*

*Powell Community - https://cityofpowell.us/residents/parks-recreation/community-garden/*

*Westerville Community - https://parks.westerville.org/parks-home-page*

*Genoa Township - https://www.genoatwp.com/departments/parks/worthing_road_park_(community_garden).php*



இங்கு உள்ள படத்தில் எத்தனை செவ்வகங்கள் *(rectangles)* உள்ளன?



எங்கு விதை வாங்கலாம்?

*https://www.seedsofindia.com/vegetable-seeds/*

எப்பொழுது விதை விதைக்கலாம்?

*https://www.seedsofindia.com/when-to-start-your-seedlings/*



நண்பன் 1: மாஸ்க் போடாம வெளியே போகக் கூடாதுன்னு அரசாங்கம் சொன்னது நல்லதாப் போச்சு.
நண்பன் 2: ஏன்?
நண்பன் 1: மாஸ்க் தானே போடறோம், முகம் தெரியவா போகுதுன்னு என் மனைவி மேக்கப் போடற நேரம் குறைஞ்சிருச்சு!

நிலம் தயார் படுத்துதல் , செடி வகை காய்கறிகள், கொடி வகை காய்கறிகள், நிழலில் வளரும் தாவரங்கள் பற்றிய குறிப்புகளை கீழ்கண்ட வலையொளி தளத்தில் காணலாம். உங்களுக்குத் தெரிந்த சமுதாயத் தோட்டம் பற்றிய விவரங்களையும் மற்றும் தோட்டப் பராமரிப்பு உதவிக்குறிப்புகளையும்(tips) எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். தோட்டப் பராமரிப்பு பற்றி உங்களுக்கு இருக்கும் கேள்விகளையும், சந்தேகங்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். அடுத்த இதழில் இப்பகுதியில் அதற்கான விடைகளை நாங்கள் உங்களுக்காக பதிவிடுகிறோம்.

**-தொடரும்……..**

# இன்றைய வேண்டும்



- *பிரியதர்ஷினி செல்வராஜ்*

குறிப்பு: உலகநீதி பாடல் 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' எதிர்மறையான எண்ணங்களை விதைக்கிறது என்று எண்ணிய இராமலிங்க அடிகளார் நேர்மறையாக 'வேண்டும்' என்று பாடினார். பாரதியாரின் 'மனதில் உறுதி வேண்டும்' கவிதை அதன் பிரதிபலிப்பே!

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் - சங்கமம் '19 வில்லுப் பாட்டு வரிசையில் கீழ்கண்ட கவிதை, ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் கவிஞர் வைரமுத்து எழுதிய 'புத்தம் புது பூமி வேண்டும்' மெட்டில் அரங்கேற்றப்பட்டது.

*COVIDக்கு பதிலாக #metoo வாக அதில் இருந்தது.*

மாசு இல்லாத காற்று வேண்டும்
தூசு இல்லா தண்ணீர் வேண்டும்
பிணிகள் இல்லா உடலும் வேண்டும்
COVID இல்லாத உலகம் வேண்டும்



வன்முறை இல்லா புரட்சி வேண்டும்
வறட்சி இல்லா நாடும் வேண்டும்
தளர்ச்சி இல்லா மனமும் வேண்டும்
மறுமலர்ச்சி எதிலும் வேண்டும்



# திசை மாறிய தொப்புள்கொடி உறவுகள்

நெய்யின் சுகந்த மணம், மெதுவாக சமையலறையிலிருந்து வெளிவந்து, வீடு முழுவதும் பரவியது. அன்னபூரணி நெற்றியில் துளிர்த்த வியர்வையை கைத்துண்டால் துடைத்தபடி ஹாலில் வந்து அமர்ந்தாள்.

"என்ன பூரணி, பட்சணம் எல்லாம் தடபுடலா இருக்கு... வேலையை முடிச்சுட்டியா, இன்னும் ஏதாவது செய்யப் போறியா?"

"எல்லாம் முடிஞ்ச மாதிரிதாங்க. இன்னும் தேன்குழல் மட்டும்தான் செய்ய வேண்டியிருக்கு. அதை முடிச்சுட்டா, அவ்வளவு தான்."

"எனக்கு ஒரு காபி தர முடியமா? மகனும், மருமகளும் வர்ற ஜோருல என்னை மறந்துட்டியே..." கிண்டலாக கூறினார் சுப்ரமணிய குருக்கள்.

"என்னை கலாட்டா செய்யலைன்னா உங்களுக்கு பொழுதே போகாதே!" சிறு முறுவலுடன் கூறியபடியே, காபி கலக்கச் சென்றாள் அன்னபூரணி.

சுப்ரமணிய குருக்களுக்கு 52 வயது. சென்னை வானகரத்தில் உள்ள அம்மன் கோவில் அர்ச்சகர். அன்னபூரணிக்கு வயது 47. அவர்களின் ஒரே மகன் தான் பரத். கம்ப்யூட்டர் இன்ஜினியர், டெக்சாசில் வேலை பார்க்கிறான். லட்சக் கணக்கில் சம்பாதிக்கிறான்.

சிறு வயதிலேயே மிக சூட்டிகையானவன் பரத். குடும்பம் ஏழ்மை நிலையில் இருப்பது தெரிந்து, தான் நன்றாக படித்தால் தான் குடும்பம் முன்னேற முடியும் என்பதை உணர்ந்து, எப்போதும் பாட புத்தகமும் கையுமாக அலைவான். வகுப்பில் எப்போதும் அவன் தான் முதல் மாணவன்.

பிளஸ் 2வில் பள்ளி அளவில் முதல் மதிப்பெண்ணும், மாவட்ட அளவில் மூன்றாவது இடத்திலும் வந்தான். பொறியியல் கல்லூரியில் சேர்த்து விட்டாலும், அந்த நான்கு ஆண்டுகள் படிப்பு முடிவதற்குள், சுப்ரமணிய குருக்கள் மிகவும் திண்டாடித் தான் போய்விட்டார்.

வங்கி கடன் கிடைத்திருந்தாலும், கல்லூரிக் கட்டணம் போக, மீதி செலவுகளான புத்தகம், உணவு, விடுதிக் கட்டணம் என மற்றவற்றுக்கெல்லாம் பல இடங்களில் கடன் வாங்கியும், இருந்த ஒரே ஓட்டு வீட்டை விற்றும் சமாளித்தார்.

எப்படியோ ஒரு வழியாக நல்ல மதிப்பெண்ணுடன் பரத் பொறியியல் படிப்பை முடித்தான். அதற்குப் பின், சென்னையில் உள்ள, ஒரு பன்னாட்டு நிறுவனத்தில், அப்ரென்டிஸாக சேர்ந்தான். இரண்டு வருட பயிற்சிக்குப்பின், பணி நிரந்தரம் செய்யப்பட்டு, நிறுவனத்தின் டெக்ஸாஸ் கிளைக்கு, பணி மாற்றம் செய்யப்பட்டான்.

கண்காணாத இடத்திற்கு போய் மகன் சாப்பாட்டிற்கு கஷ்டப்படக்கூடாது, சிறு பிராயத்தில் சாப்பாட்டிற்கு கஷ்டப்பட்டது போதும். இனிமேல் அந்த நிலை வரக்கூடாது

என்று நினைத்த அன்னபூரணி, திருமணத்தை உடனே முடிக்க வேண்டும் என்று கூறிவிட்டாள்.

படிக்கும் காலத்தில், பரத்திற்கு பெரும்பாலும் ரசம் சாதம், தயிர்சாதம் தான். பல நேரங்களில் தொட்டுக் கொள்ள பொரியல் கூட இருக்காது. ஊறுகாயை தொட்டுக் கொண்டு சாப்பிடுவான். குருக்களும், அவர் மனைவியும், தாங்கள் சாப்பிடாமல் கூட இருந்து விடுவர். ஆனால் மகனுக்கு எப்படியாவது, எதையாவது மூன்று வேளையும் சாப்பிடக் கொடுத்து விடுவர். பரத்தும் இதுதான் வேண்டும், அதுதான் வேண்டும் என்று அடம்பிடிக்காமல் கிடைத்ததை சாப்பிட்டு, படிப்பு ஒன்றையே ஒரு தவம் மாதிரி மேற்கொண்டிருந்தான்.

பணி நிரந்தரம் செய்யப்பட்ட உடனே திருமணம் நடந்ததால், அதுவரை அவனுக்கு வந்திருந்த உதவிப் பணத்தில், வங்கியில் பெற்றிருந்த கல்வி கடனை அடைத்துவிட்டு, மீதி சேர்த்து வைத்திருந்த பணத்திலிருந்து தான் திருமண செலவுகளை மேற்கொண்டனர்.



மருமகள் சிந்துஜாவும், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். அவள் அப்பா, ஒரு ஓட்டலில் சமையற்காரர். பிளஸ் 2 முடித்திருந்தாள். மேற்கொண்டு படிக்க வசதியில்லாததால், ஒரு சிறு நிறுவனத்தில் வேலைக்கு சென்று கொண்டிருந்தாள். அவளுக்கு பின், மூன்று தங்கைகள் படித்து கொண்டிருந்தனர்.

சுப்ரமணிய குருக்களுக்கும், அன்னபூரணிக்கும் ஒரே எண்ணம் தான். ஒரு ஏழைக் குடும்பத்துப் பெண்ணைத்தான் மணம் முடிக்க வேண்டும் என்று. வரதட்சணை, நகை, சீர் எதுவும் கேட்காமல், இவர்களே திருமண செலவுகளை செய்து, திருமணத்தை முடித்தனர்.

திருமணமான ஒரே வாரத்தில், பரத், சிந்துவுடன் டெக்ஸாஸ் சென்று விட்டான். போன புதிதில், அவ்வப்போது போன் செய்து பேசிக் கொண்டிருந்த மகனும், மருமகளும், அதன் பின் மாதம் ஒரு முறை, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை என்று பேசலாயினர்.

டெக்ஸாஸ் சென்ற பின், பரத் ஒரு முறை கூட பணம் அனுப்பவில்லை. முதல் மாதம் சம்பளம் வாங்கியவுடன், "அப்பா, இங்கே இருக்குற லைப் ஸ்டைலுக்கேற்றபடி வீட்டுக்கு பர்னிச்சர் வாங்கணும். இங்கு கார் இல்லாமல் இருக்கவே முடியாது. அதனாலே, ஒரு ரெண்டு மாதம் கழித்து பணம் அனுப்பறேன்...'' என்று கூறினான்.

அதற்கு சுப்ரமணிய குருக்கள், "நீ அங்கே வேண்டியதை செய்துக்கப்பா. இங்கே எங்களுக்கு என்ன பணமுடை... நாங்க ரெண்டு பேர் தானே... நாங்க சமாளிச்சுக்குவோம்...' என்று கூறிவிட்டார். அதற்குப் பின், பரத்திடமிருந்து பணம் பற்றி எந்தப் பேச்சும்

வந்தது கிடையாது. சுப்ரமணிய குருக்களுக்கும், அன்னபூரணிக்கும், மகன் பணம் அனுப்பவில்லையே என்ற கவலையெல்லாம் இல்லை. அவன் நன்றாக இருந்தால், அதுவே போதும். பட்டினி அவர்களுக்கு பழக்கம் தானே!

இரண்டு ஆண்டுகளுக்குப் பின், மகன் இதோ இப்போது தான் சென்னை வருவதாக போன் செய்திருந்தான். அதற்கு தான் அன்னபூரணி தடபுடலாக பட்சணங்கள் எல்லாம் செய்து அமர்க்களப்படுத்தி கொண்டிருக்கிறாள்.

அன்னபூரணியிடம் மகன் போனில் பேசும் போதெல்லாம், "அம்மா இங்க சொர்க்கம் மாதிரி இருக்கும்மா. பெரிய வீடு, தோட்டம் எல்லாம் இருக்கு. வீடு பெருக்க, பாத்திரம் தேய்க்க, துணி துவைக்க எல்லாவற்றிருக்கும் மிஷின் இருக்கு. நீங்க ரெண்டு பேரும் இங்கேயே வந்து, எங்க கூடவே தங்கிடுங்கம்மா... அங்கே என்ன இருக்கு?' என்று அடிக்கடி கூப்பிடுவான்.

"அப்பா கோவிலை விட்டுட்டு வருவார்ன்னு தோணலைப்பா, நீ சென்னை வரும்போது, அது பற்றி பார்க்கலாம்..." என்று கூறி வந்தாள் அன்னபூரணி. மகன் சொல்லிச் சொல்லியே அன்னபூரணிக்கு, அந்த ஆசை அடி மனதில் தங்கி விட்டது. எப்போதும் சுப்ரமணிய குருக்களிடம் வாய் ஓயாமல் கூறத் தொடங்கி விட்டாள், ஒரு மாதமாவது அங்கே போய் அக்கடாவென்று இருந்து விட்டு வர வேண்டுமென்று.

இப்போது மகன் வரும் தகவல் கிடைத்ததிலிருந்து அவளுக்கு கை, கால் ஓடவில்லை. எப்போது மகன் வந்து, தங்களை அவர்களுடன் கூட்டிப் போவான் என்றே மனதில் ஓடிக் கொண்டிருந்தது. பரத் வரும் அன்று, மீனம்பாக்கம் விமானநிலையம் சென்று, அவர்களை கூட்டி வர வேண்டும் என்று தான் அன்னபூரணிக்கு ஆசை. ஆனால் பரத், " அம்மா நீங்க சிரமப்பட வேண்டாம். கிளியரன்ஸ் முடிய நேரமாகும். அதனாலே, நாங்களே வந்துடறோம்..." என்று கூறி விட்டதால், வீட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் குட்டி போட்ட பூனை மாதிரி நடந்து கொண்டிருந்தாள்.



காலையிலிருந்து சாப்பிடாமல் இருவரும் காத்திருக்க, ஒருவாறு மாலை மூன்று மணிக்கு வந்து சேர்ந்தனர் பரத்வாஜும், சிந்துவும். ரெடியாக வைத்திருந்த ஆரத்தியை சுற்றி, வீட்டுக்குள் அழைத்தாள் அன்னபூரணி. இருவரும் ஏற்கனவே சிவந்த நிறமானாலும், இப்போது இன்னும் நன்கு சிவந்து, அழகாக இருந்தனர். பெருமை பிடிபடவில்லை, அன்னபூரணிக்கு.

சுப்ரமணிய குருக்கள், "காலையில் இருந்து அம்மா சாப்பிடாம உங்களுக்காக தான் காத்திருக்காள். வாப்பா, ஒரு வாய் சாப்பிடலாம்."

"இல்லைப்பா, நாங்க சிந்து வீட்டுலியே சாப்பிட்டுட்டோம். அம்மா, உன் கையாலே, ஒரு வாய் காபி குடும்மா. அது போதும்."

அப்போது தான், அவர்களுக்கு உறைத்தது, அவர்கள் இருவர் கையிலும் லக்கேஜ் எதுவும் இல்லாதது. சிந்து தன் கையில் வைத்திருந்த துணி பையை மாமியாரிடம் கொடுத்தாள். அதில் சில சாக்லேட் வகைகளும், ஒரு புடவை ஜாக்கெட், வேட்டி துண்டும் இருந்தது. அன்னபூரணிக்கு பசியில் மயக்கமே வரும் போலிருந்தது. பார்த்து பார்த்து சமைத்து வைத்திருந்த அத்தனை உணவு வகைகளும் சீண்டுவாரற்று, அங்கே கிடந்தது.

காபி சாப்பிட்ட சிறிது நேரத்தில், "சரிப்பா நாங்க கிளம்பறோம். அங்கே சிந்து வீட்டுல தங்கிக்கிறோம். நான் அடிக்கடி வந்து பார்த்துக்கறேன். ஒரு மாசம் லீவு இருக்கு இல்ல" கூறியவாறே கிளம்பி விட்டான் பரத்.

மறக்காமல், மாமியார் செய்து வைத்திருந்த பட்சணங்களை ஒன்று விடாமல் உரிமையுடன், 'பேக்' செய்து கொண்டு கூடவே கிளம்பி விட்டாள் சிந்து. இவர்கள் இருவரும், அதை ருசி கூட பார்த்திருக்கவில்லை. இருவருக்கும் மிகவும் வருத்தமாக இருந்தாலும், சுப்ரமணிய குருக்கள் வெளியில் எதையும் காண்பித்துக் கொள்ளவில்லை.

அன்னபூரணி, அவர்கள் கிளம்பியவுடன் மனம் தாளாமல் புலம்பி தள்ளி விட்டாள்.

"ஒரே பையன்னு ஆசையா வளர்த்தோம். இப்ப அவன் யாரோ மாதிரி வந்து அரைமணி நேரத்துல ஓடறான். எனக்கு மனசு சங்கடமா இருக்குங்க."

குருக்கள் தான் அவளை பலவாறு தேற்றி, சாப்பிடவைத்தார். இரண்டு நாட்கள் கழித்து, மறுபடியும் வந்த பரத், அப்பாவிடம் தனியாக பேசினான்.

"அப்பா, சிந்துக்கு அவ அம்மாவை டெக்ஸாசுக்கு கூட்டிக்கிட்டு போய், ஒரு மாசம் கூட தங்க வைச்சுக்க ஆசைப்பா. அவ அம்மாவும் பாவம், சின்ன வயசிலிருந்து குடும்பம், குழந்தைகள்ன்னு உழைச்சு ஓடாயிட்டா. அதனால, அவங்களை நாங்க இப்ப கூட்டிக்கிட்டு போகப் போறோம். நீங்க எல்லாத்தையும் சரியா புரிஞ்சிப்பீங்க. அதனால தான், உங்ககிட்ட சொல்றேன். அம்மாவுக்கு எப்படியாவது சொல்லி புரிய வைக்கறது உங்க பொறுப்புப்பா.

அப்புறம்... சிந்துவிற்கு தனி குடித்தனமா இருக்கிறது தான் பிடிச்சிருக்குப்பா. நீங்களும், அம்மாவும் அங்கே சாஸ்வதமா இருக்க முடியாதுப்பா. அவ பிரைவசியை விரும்புறா. அம்மாவுக்கும், அவளுக்கும் ஒத்துப் போகாதுப்பா.

நீங்க அங்கே வந்தா, அவ உங்களை உதாசீனப்படுத்திடுவாளோன்னு எனக்கு பயமா இருக்குப்பா. அதனால, நீங்க போன் கூட செய்யாதீங்க. நானே, அப்பப்ப சமயம் கிடைக்கும் போது, உங்களுக்கு போன் செய்றேன்."

அத்தோடு டெக்ஸாசுக்கு கிளம்பும் அன்று தான் இருவரும் வந்து ஐந்து நிமிடம் இருந்து, விடை பெற்றுக் கிளம்பினர்.

அன்று இரவு, "என்னங்க நான் உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு வந்ததிலிருந்து, எதுக்கும் ஆசைப்பட்டதில்லை. ஆனால், நம்ம பையன் வெளிநாட்டுக்கு போனதுக்கு அப்புறம், ஒரு மாசமாவது அங்கே போய் இருக்கணும்ன்னு ஆசைப்பட்டேன். அது நிராசையாயிடுச்சு. சரி, வாங்க தூங்கலாம். நீங்க நாலு மணிக்கு எழுந்து குளிச்சு கோவிலுக்கு போகணும்."

இரண்டு மாதங்கள் உருண்டோடிய பின், டெக்ஸாசில் ஒரு நாள்...

"என்னங்க... டாக்டர் நான் மாசமா இருக்கறதை உறுதி செய்திட்டாரு, எனக்கு விதம் விதமா சாப்பிடணும்ன்னு ரொம்ப ஆசையா இருக்குங்க. எங்க அம்மா, "நான் இப்பத்தான், ஒரு மாசம் உங்க கூட இருந்தேன் மறுபடியும் அப்பாவையும், தங்கைகளையும் விட்டுட்டு வர முடியாது"ன்னுட்டாங்க. எனக்கு சாதாரணமான தினப்படி சமையல் தான் தெரியும். இப்ப என்னங்க செய்யறது?"

"நாம வேண்டுமானால், ஒரு சமையல்காரியை வேலைக்கு அமர்த்திக்கலாமா?"

"இங்கே அப்படியெல்லாம் சமையலுக்கு ஆள் கிடைக்க மாட்டாங்களே."

"அப்ப என்ன தான் செய்யறது?"

"பேசாம உங்க அம்மாவை வரவழைச்சா என்னங்க? பிரசவம் முடியற வரை, இங்கேயே இருந்து, எனக்கு வேண்டியதை சமைச்சுப் போடட்டுமே."

"அப்பா ஒரு மாசம் வரை வேண்டுமானால், கோவிலை பார்த்துக்க வேறு ஆளை ஏற்பாடு செய்துட்டு வருவார். ஆனால்..." அதுக்கு மேல முடிக்க விடவில்லை சிந்துஜா.

"அவர் எதுக்கு இங்கே வரணும்? உங்க அம்மா மட்டும் வந்தா போதும்."

"நீ தானே நமக்கு பிரைவசி தேவை, அவங்க இங்கே வந்தா சரிப்படாதுன்னு சொன்னே. இப்பக் கூப்பிட்டா எப்படி வருவாங்க?"

"அதெல்லாம், இங்க வறதுக்கு உங்க அம்மாவுக்கு ரொம்ப ஆசை. சாப்பாட்டுக்கே லாட்டரி அடிக்கிறவங்க தானே? இங்க வந்தா, மூன்று வேளையும் நல்லா சாப்பிடலாமே. நீங்க போன் செய்யுங்க சொல்றேன்."

சிந்துஜா பேசுவது ஒன்றுமே பிடிக்கவில்லை பரத்திற்கு. "சரி, நல்ல சேதியை டாக்டர் சொல்லியிருக்காரு. புதுசா கட்டப்பட்ட அம்மன் கோவிலுக்கு போன வாரம் கும்பாபிஷேகம் நடந்தது இல்ல... அங்க போய் சாமி கும்பிட்டுட்டு வரலாம். வந்து மீதியை பார்த்துக்கலாம்."

இவர்கள் போன போது சற்றுக் கூட்டமாக இருந்தது. அப்போது தான் அம்மனுக்கு அலங்காரம் முடித்து, திரை விலகி தீபாராதனை காட்டப்பட்டது. கண்களை மூடி கை குவித்து இறைவனை வணங்கி, கண்களை திறந்தால், தீபாராதனை தட்டுடன் அருகில் வந்த குருக்களைப் பார்த்து, அதிர்ந்தான் பரத்.

அங்கே நிற்பது யார்? அப்பாவா? கண்களை கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் பார்த்தான்.

“அப்பா!” அவனை அறியாமல் வாய் முணுமுணுத்தது.

"கொஞ்சம் இருப்பா. இதோ வரேன்." அங்கிருந்த வேறொரு குருக்களிடம் ஏதோ சொல்லி விட்டு வந்த அப்பா, "அதோ, அது தான் நம்ம குவார்ட்டர்ஸ். வாங்க, போகலாம்" குருக்கள் முன்னே நடக்க, பேச்சற்று பின் தொடர்ந்தனர் இருவரும்.

வீட்டில் இவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ற அன்னபூரணி, "சென்னையில் அப்பா வேலை பார்த்த கோவில் தர்மகர்த்தாவின் பொண்ணும், மாப்பிள்ளையும் இங்கே தான் இருக்காங்க. அவர்கள் கட்டிய கோவிலுக்கு, பூஜை விதிமுறைகள் தெரிஞ்ச தலைமை குருக்கள் வேணும்ன்னு, அப்பா கிட்ட கேட்டுகிட்டாங்க. தர்மகர்த்தாவும், நீங்க டெக்ஸாசுக்கு கிளம்புங்க. நான் இங்கே வேறு ஆளை பார்த்துக்கறேன்னு சொல்லிட்டார்.

அப்பாவும் சென்னையில நமக்கு யாரிருக்கா... தெய்வ கைங்கரியத்தை எங்கேயிருந்து செய்தா என்னன்னு புறப்பட சொல்லிட்டார். இங்கே அப்பாவுக்கு மாத சம்பளம், ஒரு லட்சம் ரூபாய்" கட கடவெனக் கூறி முடித்தாள் அன்னபூரணி.

"அம்மா, நானும் ஒரு சந்தோஷமான விஷயம் சொல்லப்போறேன். இப்ப உங்க மருமகள் தாய்மை அடைஞ்சிருக்கா. அவளுக்கு வாய்க்கு ருசியா சாப்பிடணும்ன்னு தோணுதாம்; அவ அம்மா, இப்ப வர முடியாத சூழ்நிலை. நீங்க ரெண்டு பேரும் எங்க கூட பிரசவம் வரை இருந்தா நல்லாயிருக்கும்மா."

"அது சாத்தியப்படாதுப்பா, அப்பா பூஜை முடிச்ச மீதி நேரத்துல, இங்கே இருக்கிற வேத பாடசாலையில் வேதம் சொல்லிக் கொடுக்கிறார். அதுக்கு இங்கே இருக்கிறது தான் சவுகரியம்."

"அம்மா... அப்பா வரமுடியலைன்னா பரவாயில்லை. நீ மட்டுமாவது வாம்மா."

"இல்லைப்பா அப்பாவுக்கும் வயசாகிறது. அவரைப் பார்த்துக்கறது தான், என் முதல் கடமை. அது மட்டுமில்லாம, தினமும் கோவில் பிரசாதங்களை செய்கிற வேலையும் எனக்கு கொடுத்திருக்காங்க.



வேதம் கத்துக்கறவங்களுக்கும், கடவுளை தரிசிக்க வர்றவங்களுக்கும், மதிய உணவு செய்யும் பொறுப்பும் எனக்கு இருக்கு. இதுக்காக எனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் மாத சம்பளம் தர்றாங்க. வேண்டுமானால் நீங்க ரெண்டு பேரும் இங்கே தங்கிக்குங்க. நான் வேண்டியதை சமைச்சுப் போடுறேன்."

"இல்லைம்மா. இங்கே குவார்ட்டர்ஸ் சின்னதா இருக்கு," என்று இழுத்தான் பரத்.

"ஓ... ஆமாம் உங்களுக்கு இங்கே பிரைவசி இருக்காது இல்ல... அதை நான் மறந்துட்டேன். சரிப்பா, நான் தினமும் அவ விருப்பப்படுற சமைச்சு தர்றேன். நீ வந்து வாங்கிகிட்டு போ."

"இல்லைம்மா. என் ஆபீஸ் ஒரு கோடியிலன்னா, வீடு இன்னொரு கோடியில, நீங்க இருக்கறது மற்றொரு பக்கம். தினமும் வர முடியாதும்மா. அது கஷ்டம்."

"பரத், இவ்வளவு நாள் உனக்காகவே நாங்க ரெண்டு பேரும் வாழ்ந்தோம், பசியும் பட்டினியுமா இருந்து, உன்னை ஆளாக்கி, நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தோம். ஆனால், கல்யாணம் ஆனவுடன் உனக்கு நாங்க தேவையற்று போயிட்டோம்.

கலங்கி நின்ன எங்களுக்கு தொப்புள் கொடி உறவு போனா என்ன, வேற புதிய உறவுகளை ஏற்படுத்தி தர்ரேன்னு, கடவுள் புதிய பந்தங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். இனிமேல், அந்த பந்தங்களை எங்களால விட முடியாது.

ஆனா... உனக்கு எப்ப இங்கே வரணும்ன்னு தோணினாலும், நீங்க ரெண்டு பேரும் வரலாம். எங்களால முடிஞ்சத செய்றோம். இப்ப மதிய உணவு நேரம் நெருங்கிடுச்சு. நான் போய் பரிமாறணும். உங்களுக்கு எது வசதியோ, அது மாதிரி முடிவெடுங்க. சாப்பாடு எல்லாம் இருக்கு; எடுத்துப் போட்டு சாப்பிடுங்க; நான் அரை மணி நேரம் கழித்து திரும்பி வருவேன்" என்று கூறி அரக்க பறக்க கிளம்பினாள் அன்னபூரணி.

பெற்றவர்களின் அன்பை உணர முடியாமல், மனைவியின் சுயநல போக்கிற்கு அடிமையாகி, அவர்களை உதாசீனப்படுத்தி இப்போது, அதே அன்பிற்கு ஏங்கிய பரத், சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த அப்பாவின் முகத்தை ஏறெடுத்தும் பார்க்க கூசி, அங்கிருந்து தன் மனைவியுடன், தளர்ந்த நடையுடன் வெளியேறினான்.

... படித்ததில் பிடித்தது.



சுப்பு ஒரு கணிதப் பிரியர். அனைத்து விஷயங்களையும் ஒரு தீவிர சிந்தனையுடன் ஆராய்வார். ஒரு நாள் தனது வீட்டு முற்றத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் மகள் தக்காளி பறிக்க ஒரு கூடையுடன் வந்தாள். அவள் பறிப்பதை பார்த்த சுப்பு கணித உலகுக்குள் சென்றார். கூடையில் உள்ள தக்காளி ஒரு நிமிடத்தில் இரட்டிப்பாகியதைப் பார்த்தார். மதியம் 12:00 மணிக்கு கூடை முழுதாக நிறைந்தது என்றால், எத்தனை மணிக்கு கூடை பாதியாக நிறைந்திருக்கும்?

# தேசிய கல்விக் கொள்கை 2020- மும்மொழிக் கொள்கையைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்



*-பிரபாவதி செல்லன்*

*"கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த ஆயுதம்"*

*-நெல்சன் மண்டேலா*

உலகில் மனிதகுல வளர்ச்சிக்கு கல்வி ஒரு அடிப்படைத் தேவையாகவும். கலாச்சார முன்னேற்றத்தை பிரதிபலிக்கவும், மற்ற கலாச்சாரத்தை புரிந்து கொள்வதற்கும் கல்வி அவசியமாகிறது. கல்வி என்பது இவ்வுலகில் மிகப்பெரிய ஆயுதமாக மதிக்கப்படுகின்றது. தற்போதைய வேகமான சூழ்நிலையில் கல்வி ஒரு தேவை என்பதைத் தாண்டி ஒரு மனிதனுக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஒரு மனிதன் கல்வியை பெறுவதன் மூலம் அவனுடைய தேவைகள், தனிமனித வளர்ச்சி, சமூக வளர்ச்சி, நாகரீக வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைய இயல்கிறது.

இப்பொழுது இருக்கும் சூழலில் அனைத்து நாடுகளுமே கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு பெரிதும் பாடுபடுகின்றன. அதுமட்டுமல்லாமல் கல்விக் கொள்கையிலும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. இதில் இந்தியா மட்டும் விதிவிலக்கல்ல, கல்விக் கொள்கையில் பெரும் மாற்றங்களை மத்திய, மாநில அரசுகள் கொண்டு வரத்தொடங்கியுள்ளது. பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி முறையில் பெரும் மாற்றத்திற்கு கல்வி கொள்கை முக்கிய பங்களிக்கின்றன. இதனை காலத்திற்கு ஏற்ப திருத்தி அமைக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உள்ளது. எனவே நம் இந்திய தேசத்தில் கல்விக்கு பெரும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் புதிய கல்விக் கொள்கை மத்திய அரசினால் 2020இல் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது.




தேசிய கல்விக்கொள்கை திடீரென உருவாக்கப்பட்டது அல்ல, 34 ஆண்டுகளுக்கு முன்பாக வரையறுக்கப்பட்டது. இதனுடைய முக்கிய நோக்கம் இந்தியாவின் கல்வித் தரத்தை மேம்படுத்துவது. இதில் பள்ளிக் கல்வி, உயர் கல்வி, தொழிற்கல்வி, முதியோர் கல்வி உள்ளிட்டவை தொடர்பான பல்வேறு வழிகாட்டுதல்கள் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவின் தேசிய கல்விக் கொள்கை, பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியில் 1968-ஆம் ஆண்டு முதன் முதலில் உருவாக்கப்பட்டது. பிரதமர் ராஜிவ் காந்தி ஆட்சியில் 1986-ஆம் ஆண்டு கல்விக் கொள்கையில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அதற்கு பிறகு

*1992-ஆம் ஆண்டு பிரதமர் நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆனால் அதில் பெருமளவில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. கடந்த 2016-ஆம் ஆண்டு டி.எஸ்.ஆர் சுப்பிரமணியன் குழுவினரின் கல்விக் கொள்கையில் சில திருத்தங்கள் செய்து வெளியிடப்பட்டன. மத்திய அரசின் தலைமையில் பிரதமர் மோடி பொறுப்பேற்றவுடன் மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப கல்வித்தரத்தை உயர்த்த முடிவு செய்தனர். இதற்கு 2017-ஆம் ஆண்டு இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் அல்போன்ஸ் கன்னந்தனம், ராம்சங்கர் குரீல், எம்.கே. ஸ்ரீதர், டி.வி.கட்டிமணி, மஸார் ஆசிப், கிஷன் மோகன் திரிபாதி, மஞ்சுல் பார்கவா, வசுதா காமத் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் 2019ஆம் ஆண்டு புதிய வரைவு அறிக்கையை சமர்பித்தனர்.*

*புதிய கல்விக் கொள்கையின் ஒரு அங்கமாக மத்திய அரசால் உருவாக்கப்பட்ட மும்மொழிக் கொள்கை, அனைத்து மாநிலங்களிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் குறைந்தது ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி வழிக்கல்வியை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது.*




*தாய்மொழி, ஆங்கிலம், மற்றும் இந்தி அல்லது வேறொரு மொழியைக் கற்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மும்மொழிக் கொள்கையின்படி தனக்கு விருப்பமான மொழியை தேர்ந்தெடுத்து படிக்கலாம் என்று புதிய கல்விக் கொள்கையின் வரைவு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பெரும்பாலான அரசியல் கட்சிகள் தமிழ்மொழிக்கு உலை வைக்கும் செயலாக கருதி, இந்தியை மூன்றாவது மொழியாக்க வேண்டாம் என்று கருதுகிறார்கள்.*

*புதிய கல்விக் கொள்கையின் 2020 மும்மொழிக் கொள்கையைப் பற்றி நாடு முழுவதும் பல விவாதங்கள் நடைபெற்றன. தமிழகத்தில் விவாதிக்கப்பட்ட சில கருத்துக்கள், கல்விக் கொள்கைக்கு எதிராகவும், சில கருத்துகள் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது போலும் அமைந்துள்ளது. பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் புதிய கல்விக்கொள்கை தொடர்பாக ஆலோசனைகளும், கருத்துகளும் மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளனர்.*

**தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை - ஒரு கண்ணோட்டம்**

*தமிழகத்தில் 1965 ஆம் ஆண்டு மொழிக் கலவரம் ஏற்பட்டது. 1967-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு அண்ணா அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றார். பின்பு தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கை உருவாக்கப்பட்டது. தென்னிந்தியாவில் மூன்று மாநிலங்களில் மும்மொழிக்*

கொள்கையை மத்திய அரசு 1968-ல் அமல்படுத்தியது. கேரளம், ஆந்திரம், தெலுங்கானா, கர்நாடகா முதலிய தென் மாநிலங்களிலும் மேலும் ஹிந்தி பேசாத ஒரிசா, வங்காளம் முதலிய வடமாநிலங்களிலும் மும்மொழிக் கொள்கையை அமல் படுத்தியதால் ஹிந்தி தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இருப்பினும் தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையின் மேலுள்ள எதிர்ப்புகள் அதிகரித்ததால் இருமொழிக் கொள்கை அமல் படுத்தப்பட்டது.



தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு *1980*இல் இருந்து ஹிந்தி பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு அமைவதில்லை. இதனால் இந்த புதிய மொழிக் கொள்கையின் மூலம் இந்தி பயிலும் திட்டம் மிக அவசியமாகும்.

தமிழ்நாட்டில் படிக்கும் மாணவர்கள் வேலைவாய்ப்பு தேடி மற்ற மாநிலங்களுக்கு செல்லும் பொழுது அவர்களுக்கு இந்தி தேவைப்படுகிறது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் தாய்மொழி முதல் மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும், இந்தி விருப்பப் பாடமாகவும் சேர்க்கப்படவேண்டும். இது மத்திய அரசின் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு பல விதங்களில் பயன்படும்.

மத்திய அரசுப் பணியில், பதவி உயர்வுக்காக தமிழகத்திலிருந்து வேறு மாநிலங்களுக்குச் செல்லும் பொழுது அங்கு பெருமளவில் வாய்ப்புகள், இந்தி மொழி அல்லது அந்தந்த மாநில மொழி தெரிந்தவர்களுக்கு கிடைப்பதை நம்மால் பார்க்க முடியும்.

அதே சமயம் தமிழ் மொழியை அழியாமல் காக்க, அரசு மக்களை ஊக்குவிப்பதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கலாம். உதாரணமாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள அரசு மற்றும் தனியார் தொழில்துறையில் தமிழ் மக்களுக்கு முன்னுரிமை, ஆண்டுதோறும் தமிழ் மொழியில் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர்களுக்கு விருதுகள் மற்றும் அரசு உயர் பதவிகளில் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை போன்ற திட்டங்களை அரசு அறிமுகம் செய்யலாம்.

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு வேலைகளிலும் தமிழ் தெரிந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதைச் செயல்படுத்த ஆரம்ப கட்ட கல்வியிலிருந்து உயர்கல்வி வரையிலும் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தரவேண்டும்.

**முடிவுரை:**

புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சிறந்த அரசு நினைத்தால் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் முடியும். மும்மொழிக் கொள்கை அனைத்து விதத்திலும் பயன்படும் விதமாக அரசு நடுநிலை பாட்டுடன் இருப்பது சிறந்தது. அதே சமயம் தமிழ் மொழியை ஊக்குவிக்கும் விதமாக அரசு மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தனியார் துறைகளில் திட்டங்கள் அமைய வேண்டும். இதில் சில நெறிமுறைகளைத் திணித்தால் பள்ளி மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருக்காது. மொழி என்பது மிகவும் அவசியமானது. அதனை சூழ்நிலைக்கேற்ப நாம் கற்றுக்கொள்ள முடியும். ஆனால், அதனை திணிக்கக்கூடாது. மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப படிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். பிற மொழி படிப்பதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் அந்தந்த மாநிலங்களுக்கு அதன் தாய்மொழியே முதன்மை மொழியாக இருக்க வேண்டும்.

# விடைகள்

1. **பக்கம் 4 -** நீங்கள் ஒரு பொருளை உங்கள் பக்கத்து வீட்டுகாரரிடமிருந்து $40 க்கு வாங்குகிறீர்கள். அந்த பொருள் இனிமேல் உங்களுக்கு தேவையில்லை என எண்ணி, மற்றொருவரிடம் $50க்கு விற்று லாபம் அடைகிறீர்கள். ஆனால் அந்த பொருள் உங்களுக்கு மீண்டும் தேவைப்படுகிறது. ஆதலால் அதே பொருளை, $10 கூடுதலாக கொடுத்து $60க்கு வாங்க வேண்டியதாயிற்று. தேவை முடிந்தவுடன், அந்த பொருளை $70க்கு வேறு ஒருவரிடம் விற்றுவிட்டீர்கள். இந்த ஒட்டு மொத்த வியாபாரத்தில், உங்கள் லாபம் / நஷ்டம் எவ்வளவு? $20

2. **பக்கம் 6-** நீங்கள் புத்தகம் படிக்கும் பொழுது என்றாவது உங்கள் சிந்தனை அலை பாய்ந்தது உண்டா? அப்படி ஒரு நாள் என்னுடைய கவனம் சிதறிய பொழுது தோன்றிய கேள்வி இது. நீங்கள் தற்பொழுது படிக்கும் புத்தகத்தின் இரு பக்கங்களின் எண்களுடைய கூட்டுத்தொகை *(sum of 2 page numbers facing you)* 57 என்றால், வலது பக்கத்தின் எண் என்னவாக இருக்கும்? இடது - 28, வலது - 29 (57/2 = 28.5, புத்தகத்தின் இடது பக்க எண் எப்போதும் இரட்டைப்படை எண்ணாகவே இருக்கும். அதனால் இடது பக்க எண் 28, வலது பக்க எண் 29)

3. **பக்கம் 24 -** ஆழக் குழி தோண்டி, அதிலே ஒரு முட்டை இட்டு, அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை? தென்னை

4. **பக்கம் 29** அர்ச்சனா தனது விவசாய மாமாவின் வீட்டிற்கு விடுமுறைக்கு சென்றாள். அவரது பண்ணையில் பறவைகளும் மாடுகளுமே உள்ளதைப் பார்த்தாள். மாமாவிடம் எத்தனை பறவைகள், மாடுகள் உள்ளன என்று கேட்டாள். மாமாவோ விடையை கேள்வியாக சொன்னார். நீங்கள் அவளுக்கு விடை கண்டு பிடிக்க உதவுங்கள். அவர் கூறியது – “இங்கு 30 தலைகளும், 100 கால்களும் உள்ளன"? 10 பறவைகள், 20 மாடுகள்

5. **பக்கம் 32** இங்கு உள்ள படத்தில் எத்தனை செவ்வகங்கள் *(rectangles)* உள்ளன?



**36**

6. **பக்கம் 40 -** சுப்பு ஒரு கணிதப் பிரியர். அனைத்து விஷயங்களையும் ஒரு தீவிர சிந்தனையுடன் ஆராய்வார். ஒரு நாள் தனது வீட்டு முற்றத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் மகள் தக்காளி பறிக்க ஒரு கூடையுடன் வந்தாள். அவள் பறிப்பதை பார்த்த சுப்பு கணித உலகுக்குள் சென்றார். கூடையில் உள்ள தக்காளி ஒரு நிமிடத்தில் இரட்டிப்பாகியதைப் பார்த்தார். மதியம் 12:00 மணிக்கு கூடை முழுதாக நிறைந்தது என்றால், எத்தனை மணிக்கு கூடை பாதியாக நிறைந்திருக்கும்? காலை 11:59


Ras Pro Sound and Vision
Birthday Parties
Weddings
Receptions
Private Parties
Corporate Events
614-849-2931


NELLAI MARTS
GLOBAL CLASS INDIAN GROCERY


NATIYALAYAM DANCE SCHOOL
SUNEETHA RAVINDRAN
614 209 7846


Director & Instructor
Priya Gajaananan
(614) 570 3318
priya.gajaananan@yahoo.com
www.kalabhavanam.com
கலா பவனம்
Kalabhavanam Dance School


Red1Realty
Pathmathasan "Patrick" Sangaralingam
Real Estate Consultant
Phone: +1 (614) 804-4307
Email: patrick@urnexthouse.com
Buy
Sell
Invest
TODAY
From first time home buyers to short sales and foreclosures, I've experienced it all! Whether it's aiding you in sizing up to fit a larger family or downsizing into ranch-style condos, I will get the job done. Through partnering with real estate investors, I work to completely transform potential homes, accumulating a portfolio of income producing properties. My goal is simple: to provide you with an easy and worry-free route to selling or buying your home. No pressure or stress, just guidance in accomplishing exactly what you want and need.
Make your dream home come true!


Hutta&Cook
ORTHODONTICS
Trust Your Smile to a Specialist!
Dublin | Worthington
www.huttasmiles.com


GUPTA & ASSOCIATES, CPA, LLC
CERTIFIED PUBLIC ACCOUNTANTS
"YOUR GROWTH IS OUR SUCCESS"
614-344-4246


IntelliX Software, Inc
Delivering Real Solutions, On Time, On Budget


AllStates CPA
A Rammohan & Associates Company
The power to make a difference,
the people to make it count.
Nataraja Rammohan CPA
614-516-0070
Vasumathi Varadarajan CPA
614-516-0064
Saran K. Palaniswamy
614-516-0066
www.AllStatesCPA.com


With Best Compliments from
TRABUE GARAGE
AUTOMOTIVE SERVICE
3579 Trabue Rd.
Columbus, OH 43204
Majid Alsaf
(614) 486-5488
Oil Change
Mount & Balance
Engine
Suspension
Tires
Transmission
Brakes
Detailing

# தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு

## ஆலோசனைக்குழு



ஜான் குயிலன்



உஷா விவேக்



செந்தில் துரைசாமி

## நிர்வாகக்குழு



சந்தியா சரவணண்
தலைவர்



பிரியதர்ஷினி செல்வராஜ்
செயலாளர்



கார்த்திக் முருகேசன்
பொருளாளர்



செந்தில் வெங்கடாசலம்
வலைத்தள ஒருங்கிணைப்பாளர்



தனசீலன் காளிமுத்து
விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்



ஜெகதீஸ்வரன் கணேசன்
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்



அன்னலட்சுமி தேவசுந்தரம்
போட்டி ஒருங்கிணைப்பாளர்



மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்
கலை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்



கண்ணன் மாணிக்கம்
தகவல்தொடர்பு ஒருங்கிணைப்பாளர்

## இணை நிர்வாகக்குழு



கார்த்திக் ராமநாதன்



வினோத் ராஜ் சுந்தரம் பாபு



பாலாஜி சிவக்குமார்



லாவண்யா ராமு



சிவசங்கரி கணேஷ்

## சாரல் குழு



சிவக்குமார் ராஜு



தனசீலன் காளிமுத்து



மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்



பத்மா முத்துகுமார்



ஜெகதீஸ்வரன் கணேசன்



பிரபாவதி செல்லன்



ரம்யா ராஜமாணிக்கம்



வினோத் ராஜ் சுந்தரம் பாபு



கண்ணன் மாணிக்கம்



பாலாஜி சிவக்குமார்

## வடிவமைப்பாளர்கள்



சிவசங்கரி கணேக்ஷ்



லாவண்யா ராமு

**நம் எண்ணங்கள் மாறினவோ இல்லையோ, நம்மைச் சுற்றி இயற்கையின் வண்ணங்கள் மாறத்தொடங்கிவிட்டன, சில நாட்களில் வண்ணங்கள் தொலைந்து வெண்மை படரும் எங்கும். அட அதாங்க குளிர்காலம் வரப்போகுது, இனி அதிக நேரம் வீட்டுலதான் இருக்கணும், நடைப்பயிற்சி கூட உள்ளேதான். என்ன செய்யலாம்? எப்படி பொழுதை ஓட்டுறது? உங்களுக்கு கவலையே வேண்டாம்.**

**சில்லிடும் குளிரில் உங்களின் நேரத்தை வண்ணமயமாக்க வருகிறது**

# சாரல்

***குளிர்கால இதழ்.....***

**குளிர்கால இதழுக்கான உங்களின் மற்றும் உங்கள் வீட்டு குட்டீஸின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி ctstamilthinnai@gmail.com.**



# நன்றி!!!!

